வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 29.06.2024 சனிக்கிழமை இதழ் : 181 பக்கங்கள் : 12

# கச்சதீவு, கடல் எல்லை பிரச்னையில் இலங்கை - இந்தியா புதிய உடன்பாடு!

சென்னை, ஜூன் 29

**கச்சதீவு பிரச்னை, பாக்கு நீரிணையில் இலங்கை - இந்திய நாடுகளின் எல்லை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இரு நாடுகளும் விரிவான உடன்பாட்டை எட்டியுள்ளன என்று அறிய வருகின்றது.**




இந்த உடன்பாடு எட்டப்பட்டமை தொடர்பான விடயத்தை இந்தியாவின் பிரபல ஊடகமான தி இந்துவுக்கு அதிகாரபூர்வ செய்தித் தொடர்பாளர் உறுதிப்படுத்திய போதிலும் ஒப்பந்தத்தின் விவரத்தை வெளியிட மறுத்து விட்டார் என்று அந்த நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

கச்சதீவு, கடல் எல்லைகள்

11



## ஹிருணிகாவுக்கு 3 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, ஜூன் 29

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரே மச்சந்திரவுக்கு 3 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா நேற்று வெள்ளிக்கிழமை இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

கொழும்பு - தெமட்ட கொடையில் வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றிய அமில

11

## வடக்கு, கிழக்கில் மிதிவெடி அகற்ற ரூ. 30 கோடி வழங்குகிறது ஜப்பான்!

கொழும்பு, ஜூன் 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்காக 301 மில்லியன் (30.1 கோடி) ரூபாயை வழங்குகிறது ஜப்பான் அரசாங்கம்.

இதற்கான நிதி வழங்கும் உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி நேற்று முன்தினம் கைச்சாத்திட்டார்.

2002 ஆம் ஆண்டு முதல் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்கு ஜப்பான் அரசாங்கம் நன்கொடைகளை வழங்குகிறது. இதுவரை 4.5 கோடி டொலருக்கும் அதிகமான தொகையை ஜப்பான் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வடக்கு கிழக்கு பகுதிகளில் 215.605 மில்லியன் சதுரமீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 23.23 மில்லியன் சதுர மீற்றர் நிலப்பரப்பில் கண்ணிவெடிகள் அகற்றப்படவேண்டியுள்ளன என்று இராணுவ பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக்க குமார தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னார் துறைமுகத்தில் முனையம் நிர்மாணிக்க கேள்வி கோரப்பட்டது!

கொழும்பு, ஜூன் 29

மன்னார் துறைமுக முனைய நிர்மாண பணிகளுக்கான கேள்விகோரல் விடுக்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, மன்னார் துறைமுகத்தில் 300 மீற்றர் நீளமான முனையம் நிர்மாணிக்கப்படவுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே. டி. எஸ். ருவன்சந்திர தெரிவித்தார்.

இதற்காக உள்ளூர் முதலீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

முனையத்தின் நிர்மாண பணிகளின் பின்னர் இந்தியா - இலங்கைக்கு இடையில் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து கப்பல் சேவையை முன்னெடுப்பதற்கான வசதிகள் இலகுவாக்கப்படும் என்றும் செயலர் குறிப்பிட்டார்.

முன்னதாக, மன்னார் துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக அறிவித்து அரசாங்கத்தால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையும் இன்னுமொரு கென்யாவாக மாறியிருக்கும்!

### ஜனாதிபதி ரணில் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 29

பொருளாதார பிரச்னை காரணமாக கென்யா பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. அதனால் கொலைகளும் இடம்பெற்று வருகின்றன. பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது போயிருந்தால் இலங்கையின் நிலைமையும் அவ்வாறுதான் இருந்திருக்கும் - இவ்வாறு ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

11



## சீனாவின் பழைய நண்பர்!

### மகிந்தவை இவ்வாறு விளித்தார் சீன வெளிவிவகார பிரதி அமைச்சர்

பீஜிங், ஜூன் 29

"சீனாவின் பழைய நண்பர்", என்று மகிந்த ராஜபக்ஷவை விளித்துள்ளார் சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சன் வெய்டோங்.

முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுன கட்சியின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ 4 நாள் பயணமாக சீனா சென்றுள்ளார். நேற்று அவர் பீஜிங்கில் சீனாவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் சன் வெய் டோங்கை சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பில் 2014ஆம் ஆண்டு மகிந்த

11

## அமெரிக்க திறைசேரியின் உதவி செயலர் வருகிறார்!



கொழும்பு, ஜூன் 29

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் றொபேர்ட் கப் றோத் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்.

அவரின் வருகை தொடர் பில் அமெரிக்கத் தூதுவர் ஜலி சங் தனது எக்ஸ் தளத்தில்,

அமெரிக்க திறைசேரியின் ஆசியாவுக்கான பிரதி உதவி செயலாளர் றொபேர்ட் கப்றோத் அடுத்த வாரம் இலங்கை வருகிறார். இலங்கை வரும் அவர், அரச அதிகாரிகள், நிதித்துறை சார்ந்த

11

## ஜே. வி. பியினரே எமக்கு ஆயுதங்களை தந்தனர்!

### பிள்ளையான் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 29

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆரம்ப காலத்திலும் - தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு முதன்முதலிலும் ஆயுதங்களை தந்தவர்கள் ஜே. வி. பியினரே. பின்னர், மக் களை சுடுவதற்கு எங்களிடமே அவர்கள் ஆயுதங்களை கேட்ட னர். நாங்கள் கொடுக்கவில்லை - இவ்வாறு தமிழ் மக்கள் விடு தலைப் புலிகள் கட்சி யின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ நேச துரை சந்திரகாந்தன் என்கிற பிள்ளையான் தெரிவித்தார்.

11

## வன்செயல்களுடன் தொடர்புடைய இளைஞர் கைக்குண்டுடன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 29

வெளிநாட்டில் உள்ளவரிடம் பணம் பெற்று வன்செயல்களில் ஈடுபட்டார் என்று சந்தேகிக்கப்படும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம், கைதானவருடன் சேர்ந்து செயல்பட்டனர் என்று சந்தேகிக்கப்படும் மேலும் 5 இளைஞர்களை கைது செய்யவும் யாழ்ப்பாண பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நடவடிக்கை

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதனன்று நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்றும் அந்த உரையில் தான் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருப்பது குறித்த அறிவிப்பை விடுப்பார் எனவும் முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தான் ஜனாதிபதி பதவியில் தொடர விரும்புவதை அறிவித்த போதிலும் அது தேர்தல் மூலமா அல்லது பதவி நீடிப்பின் மூலமா என்பதை தெளிவாக அவர் அறிவிக்கவில்லை.

அதுபற்றி சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் எழுதிய போது, இன்று மொனராகலையில் நடைபெறவுள்ள பேரணியில் பலர் மேடையேறுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்திருந்தேன்.

ஆனால், அப்படி நடக்காது என்கின்றன இன்றைய செய்திகள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் சிலருக்கு தான் போட்டியிடுவதான அறிவிப்பை வெளியிடுவார் என்று உறுதியளித்திருந்தார் எனவும் அப்படி அவர் உறுதியளித்தபடி அறிவிப்பை வெளியிடாததால் அந்தக் கூட்டத்தில் மேடையேற சம்மதித்திருந்த பலர் தமது முடிவை அறிவிப்பதையும் அவரைப்போலவே ஒத்திவைத்திருக்கின்றனர் என்றும் இப்போது தெரியவந்திருக்கின்றது.

ரணில் தனது முடிவை அறிவிக்காததற்கு காரணம் இதுவரை தெரியவரவில்லை. ஆனாலும், தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேர்தல் ஆணையாளர் அலுவலகம் எதிர்வரும் பதினெழாம் திகதியே அறிவிக்க இருக்கும் நிலையில், அதுவரை அரச செலவில் மக்களுக்கு வழங்கிவரும் கொடுப்பனவுகள் - சலுகைகளை தொடர்ந்து வழங்குவதன் மூலம் ஒருவகையில் தான் முன்னெடுத்துவரும் தேர்தல் பிரசாரத்தை இன்னமும் இரண்டு வாரங்களுக்கு தொடர்வதற்காகவே என்று ரணில் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியோடு ஏற்பட்டுள்ள சில முரண்பாடுகளும் காரணம் என்று கூறப்படுகின்றது.

பெரமுனவை தனித்துக் களம் இறங்குமாறு ரணில் தரப்பில் இருக்கும் சிலர் தொடர்ந்து வலியுறுத்தி வந்தாலும் - அவரோடு உள்ள வேறு சிலர் பெரமுன இல்லாவிட்டால் தேர்தல் களத்தில் பணியாற்ற பொருத்தமான ஆட்களை தேடிப் பிடிப்பதில் ரணில் "சொதப்பி விடுவார்" என்று அச்சமடைந்திருக்கின்றனர் என்றும் இதனாலேயே அவர் தனது அறிவிப்பை ஒத்திவைத்தாரெனவும் அவருக்கு நெருக்கமான மற்றுமொரு வட்டாரம் தகவல் தெரிவித்தது.

இதேவேளை, பெரமுனவும் ஜனாதிபதித் தேர்தலில் களம் இறங்க விருப்பதாக தெற்கில் சுவரொட்டி பிரசாரம் ஒன்றை நேற்று முன்தினம் ஆரம்பித்திருந்தது.

ரணில் தரப்பையும் சஜித் தரப்பையும் ஓரணியில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சிங்கப்பூர் குழுவினர் அண்மையில் விரக்தியுடன் நாடு திரும்பியபோதிலும் இரண்டு கட்சியிலும் உள்ள சில இரண்டாம் நிலைத் தரப்பினர் கடைசி முயற்சியாகக் கடும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கின்றனர் என்றும் ஒரு செய்தி தெரிவித்தது.

இரு தரப்பும் தனித்தனியாக - எதிரெதிராகக் களம் இறங்குவது இரண்டு தரப்புக்குமே ஆபத்தானது என்று கருதும் இந்த இரு அணியினரும் தமது கடைசி முயற்சியாக சில சந்திப்புகளை நடத்திவருவதும் ரணிலின் அறிவிப்பு தள்ளிப் போனதுக்கு காரணமாக இருக்கலாம் என்கின்றன தகவல் அறிந்த வட்டாரங்கள்.

நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான சிறீ லங்கா சுதந்திர கட்சியின் இரண்டாவது மாநாடு இன்று மொனராகலையில் நடக்கின்றபோது, அங்கு டாக்டர் ராஜித சேனாரத்ன, பாட்டாலி சம்பிக்க ர்ணவக்க, சரத் பொன்சேகா ஆகியோர் மேடையேறுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்தச் செய்தியை ராஜித சேனாரத்ன தனக்கு நெருக்கமானவர்கள் சிலருடன் பகிர்ந்தும் இருந்தார்.

ஆனால், அவர் போன்ற சிலர் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அந்த மேடையில் ஏறுவது தமது கடைசிக் கட்ட முயற்சியை பாதிக்கும் என்றும் சஜித் தரப்பிலிருந்து யாரையும் இப்போது பகிரங்கமாக இணைத்துக் கொள்ளவேண்டாம் என்றும் ரணில் கேட்டுக்கொண்டதாலேயே அவர்கள் மேடையேறுவதும் பிற்போடப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராகக் களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்படும் பிரபல தொழில் அதிபரும் பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியல் எம். பியுமான தம்மிக பெரேராவும் தான் போட்டியிடுவதில் அவ்வளவாக விருப்பம் காட்டவில்லை என்றும் ரணில் - சஜித் - அநுர என்று மும்முனைப்போட்டி நிலவுமானால் தான் போட்டியிடப் போவதில்லை என்றும் தெரிவித்து வருகின்றாராம். அவர் போட்டியிட்டால் மாத்திரமே தமது கட்சி சார்பில் ஒருவரை வேட்பளராகக் களம் இறக்கலாம் என்று நினைத்திருந்த பெரமுனவும் யாரை நிறுத்துவது என்பதில் தடுமாற்றத்தில் இருக்கின்றதாம். தமது வேட்பாளரை வெற்றி பெறுவதற்காக நிறுத்தவில்லை என்றும் தமது கட்சியின் பெயரை தக்கவைப்பதற்காகவே போட்டியிட வேண்டும் எனவும் பெரமுன தரப்பில் விரும்பினாலும் அவ்வாறு போட்டியிட வேறு ஒருவரை நிறுத்தினால் அவருக்காக தாமே செலவிட வேண்டிவரும் என்றும் ஆனால், தம்மிக பெரேரா போட்டியிட்டால் தேர்தல் செலவை அவரே கவனித்துக் கொள்வார் எனவும் நம்பியிருந்த பெரமுனவுக்கு அவரின் முடிவு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றதாம்.

இதேவேளை, பெரமுனவின் மற்றுமோர் அமைச்சரான காஞ்சன விஜயசேகரவும், மாத்தறையில் ஒரு பிரமாண்ட பொதுக்கூட்டத்தை நடத்தி தனது "பலத்தை" காட்டவிருக்கிறாராம். ரணிலின் பக்கத்தில் இருக்கும் அவர், தனது பலத்தை ரணிலுக்குக் காட்டுவதற்காகவே அந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து வருகின்றாராம்.

என்னதான் நடந்தாலும் அடுத்த பதினேழாம் திகதி தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு வரும் வரை அரசியலில் ஒவ்வொருவரும் தத்தம் பலத்தைக் காட்டி பேரம்பேசலில் ஈடுபடுவதை தடுக்கமுடியாதே.!

- ஊர்க்குருவி.

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் கட்டுநாயக்கவில் இருவர் கைது!

கொழும்பு, ஜூன் 29

31 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் பெண்ணொருவர் உட்பட இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று வெள்ளிக்கிழமை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திஸ்ஸமஹாராம பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணொருவர் நேற்று அதிகாலை 04.35 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த பெண் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 100 பைக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, கடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபரொருவர் அதிகாலை 05.00 மணியளவில் டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது, விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் இந்த நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து வெளிநாட்டு சிகரெட்டுகள் அடங்கிய 58 பைக்கெற்றுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகளின் மொத்த பெறுமதி 31 இலட்சம் ரூபா என விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள நிலையில் இருவரையும் எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி நீர் கொழும்பு நீதிமன்றில் ஆஜராகுமாறு விமான நிலைய பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## கடன் மறுசீரமைப்பு ஒப்பந்த விவாதம் சகல எம்.பிக்களுக்கும் அழைப்பு

கொழும்பு, ஜூன் 29

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் மீதான விவாதம் ஜூலை 2 ஆம், 3 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, பாராளுமன்றத்தின் விசேட கூட்டம் ஜூலை 02 ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு அழைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜூலை 3-ஆம் திகதி மாலை வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது

பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க,



பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் 16ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கு இணங்க இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருகை தந்து பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார். (அ)

## குருதிக் கொடை முகாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

"சேவ் ஏ லைவ்" அமைப்பின் ஏற்பாட்டில் குருதிக் கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்தக் குருதிக் கொடை முகாம் இல. 460, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறவுள்ளது. (ஐ)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளக்கூடிய தான வெளிக்கள பயிற்சியுடன்கூடிய பராம ரிப்பாளர், மொபைல் போன் றிப்பயரிங், சோலர் பி. வி. சிஸ்ரம் இன்ஸ்ரோலர் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன், கணிய அளவை உதவியாளர், மோட்டார் சைக்கிள் ஸ்கூட்டர் பழுதுபார்த்தல், ஆடை தைத்தல் தொழில்நுட்பம், அலுமினியம் பொருத்துநர், கணினி வலையமைப்புக்கான சான்றிதழ் போன்ற என். வி. கியூ. - 4 தரத்துக்கான இலவச கற்கைநெறிகளுக்கும் மேலதிகமாக சில மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இந்தக் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் "பணிப்பாளர், தொழில்நுட்பவியல் கல்லூரி, யாழ்ப்பாணம்." என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 021 222 0028, 0021 221 2358 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு பணிப்பாளர் ரி. பாஸ்கரராஜா அறிவித்துள்ளார். (ஐ)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

சக்தி கலாசார மேம்பாட்டு மன்றத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவர் திருமதி அருண்ராஜன் சனுஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. கிருஷ்ணகுமார், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட புள்ளிவிபர கிளை உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## கவிதை நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 29

காயத்ரியின் "இருட்டின் காதலி" கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல. 24, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக) நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் கவிஞர் இ. த. ஜெயசீலன், கருத்துரையை அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் ம. அரவிந்தன், கவிதை வாசிப்பை செ. ராகவேந்தன், நூல் அறிமுக உரையை ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமார், நூல் மதிப்பீட்டுரையை பேராசிரியர் ச. முகுந்தன் ஆகியோர்ஆற்றுவர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
29.06.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், ஆனி 15

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலின் எச்சரிக்கை...!

நாட்டு மக்களுக்கான தனது உரையில் ரணில் எதனை உணர்த்த முற்படுகின்றார்? “நீங்கள் என்னை நிராகரித்தால் நஷ்டப்படப் போவது நானில்லை - நீங்கள்தான். ஏனெனில், நாட்டை சரியான வழியில் கொண்டு சென்று கொண்டிருக்கின்றேன் - இவ் வாறானதொரு சூழலில் நான் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டால், பாதிக்கப்படப்போவது நீங்கள்தான்”. ரணிலின் இந்த எச்சரிக்கை மிகவும் தெளிவாக ஒரு செய்தியைக் கூறுகின்றது. அதாவது, ஜனாதிபதித் தேர்தல் களம் மிகவும் கடினமான ஒன்றாகவே இருக்கப் போகின்றது.

ஓட்டப் பந்தயத்தில் ரணில் வெற்றிபெறுவாரா என்னும் கேள்வியுண்டு. இதேவேளை, ஓட்டப் பந்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சியும் இதுவரையில் வெற்றியளிக்கவில்லை. ரணிலும் சஜித்தும் ஒன்றிணைவார்கள் என்னும் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. அது நிறைவேறுவதற்கான வாய்ப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு சூழலில் விமல் வீரவன்ஸ தரப்பிலிருந்தும் ஒரு வேட்பாளர் நிறுத்தப்படலாம் என்றும் அபிப்பிராயங்கள் எட்டிப் பார்க்கின்றன.

இவ்வாறானதொரு பின்புலத்தில் நோக்கினால் ரணிலின் வெற்றி மிகவும் தொலைவிலேயே தெரிகின்றது. இந்தச் சூழலை அவர் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்? அவரால் முடியுமா? இந்தக் கேள்விகளுக்கு மத்தியில்தான் அவர் நாட்டு மக்களுக்கு ஒரு மறைமுகமான எச்சரிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

ரணில் ஆற்றலுள்ளவர் - அவரை மேற்குலகுக்கு பிடிக்கும் - கூடவே இந்தியாவுக்கும் பிடிக்கும் - நாடு அதலபாதாளத்தில் விழுந்த போது துணிந்து பொறுப்புகளை எடுத்தவர் - இவ்வாறானதொரு பார்வையுண்டு. ஆனால், இந்தப் பார்வைகள் அனைத்தும் பெருமளவுக்கு மத்தியதர வர்க்கத்துக்கு உரியது. ஆனால், அடித்தள மக்கள் மத்தியில் இவ்வாறான பார்வை பெருமளவில் செல்வாக்கு செலுத்தவில்லை. ஏனெனில், கோட்டாபயவுக்கு எதிரான “அறகலய” என்பது சாதாரண மக்கள் மத்தியிலிருந்து பெருமளவுக்கு விலகிய ஒன்றாகவே இருந்தது. அதிகம் மத்தியதர வர்க்கத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட விடயமாகவே இருந்தது. இன்று “அறகலய”வின் பெயரில் இயங்கிவரும் ஒரு சிறிய குழுவினர் யார் என்பதை நோக்கும்போது அதன் செல்வாக்கை புரிந்து கொள்ள முடியும். இவ்வாறானதொரு நிலையில், சாதாரண மக்கள் மத்தியில் ஏற்படும் புரிதலே வேட்பாளர்களின் வெற்றியை தீர்மானிக்கப் போகின்றது.

சாதாரண மக்கள் மத்தியில் ஒப்பீட்டடிப்படையில் ரணில் தொடர்பான பார்வை சற்றுக் குறைந்து காணப்படுவதாகவே தெரிகின்றது. இந்த நிலைமை ஒருவேளை மாற்றமடையலாம். ஆனால், தற்போதுள்ள நிலையில் ரணில் அடித்தள மக்களின் மனதில் இருப்பதாகத் தெரியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தனது தோல்வியால் மக்களுக்கு ஆபத்து நேரிடும் என்றவாறான எச்சரிக்கையை வெளியிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், இவ்வாறான எச்சரிக்கைகள் எந்தளவுக்கு சாதாரண மக்களால் உணரப்படும் - அவ்வாறு உணரப்பட்டாலும்கூட அதனை சீர்தூக்கிப் பார்க்க - ஆராய அவர்களால் முடியுமா என்பதே கேள்வி. ஏனெனில், சாதாரண மக்கள் இவ்வாறெல்லாம் சிந்திக்கக்கூடியவர்கள் அல்லர் - அதிகம் உணர்ச்சிவசப்படக் கூடியவர்கள் - அந்த நேரத்து அலையின் பின்னால் செல்லக்கூடியவர்கள். இவ்வாறான மக்களை ரணில் வெற்றி கொண்டால் மட்டுமே வெற்றிபெற முடியும்.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ் மக்கள் மத்தியிலும் ஒரு தமிழ் பொது வேட்பாளர் அலை வீசுமாக இருந்தால் அந்த நிலைமையும் ரணிலுக்கு எதிராக மாறலாம். முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஓடுகின்ற குதிரையில் ஏறவே முயற்சிப்பர். இவ்வாறான சவால்களை ரணில் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார். வெறும் எச்சரிக்கைகளால் இந்தச் சவாலை எதிர்கொள்ள முடியுமா?

# மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக காணாமற்போனோரின் உறவுகள் போராட்டம்!

மன்னார், ஜூன் 29

மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் நேற்றுக் காலை 11 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச் சந்திரா தலைமையில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.




இதன்போது “அரசாங்கம் சர்வதேச நாடுகளை ஏமாற்றியதைப் போன்று, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடுகின்ற தாய்மாரின் கண்ணீரையும், அவர்களின் துயரங்களையும் ஏமாற்றி வெற்றி பெற முடியாது” என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கண்ணீர் மல்கத் தெரிவித்துள்ளனர். (அ)

# ஜப்பானிய திட்டங்களை இலங்கையில் மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 29

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள இலங்கை பாதியில் நிறுத்தப்பட்ட ஜப்பானியத் திட்டங்களை இலங்கையில் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறினார்.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுடன் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமைக்கு இலங்கைக்கு தனது பாராட்டுக்களை தெரிவித்ததாக அவர் கூறினார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு ஜப்பான் தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் எனவும் இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மீளப் பெறுவதற்கும் இது ஒரு முக்கியமான மைல்கல் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் கடன் நெருக்கடியை தீர்க்க ஜப்பான் தன்னால் இயன்ற உதவிகளை செய்து வருகிறது என்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானவுடன், இந்த நாட்டில் ஜப்பானிய திட்டங்களை மீண்டும் தொடங்குவதற்கான நிதியைப் பயன்படுத்துவதை விரைவுபடுத்த முயற்சிப்பதொடு நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஜப்பான் இலங்கையை முழுமையாக ஆதரிக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உலோக ஏற்றுமதிக்கு விசேட அனுமதி!

கொழும்பு, ஜூன் 29

எதிர்காலத்தில் உலோகங்களை ஏற்றுமதி செய்பவர்கள் கைத்தொழில் அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

உலோகம் தொடர்பான தொழில் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனை கூறினார்.

உலோகம், இரும்பு, அது தொடர்பான உபகரணங்கள் மற்றும் பழைய பொருட்களை சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்வதைத் தடுக்கும் நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, உலோக கழிவுகள், இரும்பு தொடர்பான உபகரணங்கள் மற்றும் செம்பு, பித்தளை, அலுமினியம், சீனாவேர் மற்றும் வெள்ளை இரும்பு போன்ற குப்பை பொருட்கள் சட்டவிரோதமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதனால் ஏற்பட்ட நிதி இழப்புகள் குறித்தும் அமைச்சர் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

அங்கு, அனுமதிக்கப்பட்டுள்ள உலோகம் தொடர்பான ஏற்றுமதிகள் மற்றும் ஏற்றுமதி நிலைமைகளுக்கு ஏற்ற பொருட்களை அடையாளம் காணும் வகையில் எதிர்வரும் காலங்களில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் அனைத்து சட்டவிரோத மீள் ஏற்றுமதிகளும் நிறுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 29 சனிக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 15
நல்ல நேரம் : 07.30 - 08.30
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : அஷ்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மிதுனம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**கடகம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புது அத்தியாயம் தொடங்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**கன்னி**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். திறமைகள் வெளிப்படும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. தொட்டது துலங்கும் நாள்.

**விருட்சிகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர் கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்கு தாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**மகரம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அரசு காரியங்கள் நல்லவிதத்தில் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

# ஜெயலலிதா மர்ம மரணம் தொடர்பில் சி. பி. ஐ. விசாரணையை மறுத்தது ஏன்?

## பழனிச்சாமியிடம் தி. மு. க. கேள்வி



சென்னை, ஜூன் 29

மர்மங்கள் நிறைந்த ஜெயலலிதா மரணம் தொடர்பில் சி. பி. ஐ. விசாரணையை மறுத்து, அதற்குப் பதிலாக நீதிபதி ஆறுமுகசாமி ஆணையத்தை ஏன் பழனிச்சாமி அமைத்தார்? அப்போது, மட்டும் விசாரணை ஆணையம் தேவைப்பட்டதா? அன்றைக்கு நம்பகத்தன்மை பாதுகாக்கப்பட்டதா?" என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியிடம் அமைச்சர் கே. என். நேரு கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய விவகாரத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருக்கிறது அ. தி. மு. க. 'சி. பி. ஐ. விசாரணை வேண்டும்' என்ற கோரிக்கையையும் வைத்திருக்கிறது. சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே தான் இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டிருகிறது. 7 ஆண்டுகளுக்கு முன்பு இதே ராஜரத்தினம் மைதானம் அருகே 2017 மார்ச் 8 ஆம் திகதி ஓ. பன்னீர்செல்வம் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினாரே, அது பழனிச்சாமிக்கு நினைவிருக்கிறதா? ஜெயலலிதா மரணத்துக்கு சி. பி. ஐ. விசாரணை கேட்டுத்தான் அன்றைக்குப் பன்னீர்செல்வம் உண்ணாவிரதம் இருந்தார். இன்றைக்குப் பழனிச்சாமியோடு உண்ணாவிரதப் பந்தலில் அமர்ந்திருந்த முன்னாள் அமைச்சர் சி. பொன்னையனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். ஏனென்றால் 2017 இல் பன்னீர்செல்வம் உண்ணாவிரதத்திலும் பங்கேற்றவர் பொன்னையன்.

அன்றைக்கு மோடியிடம் செல்வாக்கு பெற்றிருந்த பன்னீர்செல்வம் அணியினரின் கோரிக்கையை ஏற்று, சி. பி. ஐ. விசாரணையை அமைத்துவிடுவார்களோ என அஞ்சி, உடனே ஜெயலலிதாவின் மருத்துவ அறிக்கையை உண்ணாவிரதத்துக்கு இரண்டு நாட்கள் முன்பு பழனிச்சாமி அரசு ஏன் அவசர அவசரமாக வெளியிட்டது? உண்ணாவிரதப் பந்தலில் பேசிய பன்னீர்செல்வம், "சிபிஐ விசாரணை நடந்தால் முதல் குற்றவாளி விஜயபாஸ்கர்தான். சி. பி. ஐ. விசாரித்தால்தான் ஜெயலலிதா மரணத்தின் மர்மம் வெளியே வரும்" என்றார். தலைவியின் மர்ம மரணத்தில் சி. பி. ஐ. விசாரணைக்கு அன்று முட்டுக்கட்டை போட்ட பழனிச்சாமி, இன்றைக்குக் கள்ளக்குறிச்சி விவகாரத்துக்கு சி. பி. ஐ. விசாரணை கேட்பதற்கு வெட்கமாக இல்லையா?- என்று நேரு மேலும் கேள்வியெழுப்பியுள்ளார். (எ)

# "செங்கோலை அகற்ற வேண்டும் தி. மு. கவின் நிலைப்பாடு என்ன?"

சென்னை, ஜூன் 29

மக்களவையில் நிறுவப்பட்டுள்ள செங்கோலை அகற்ற வேண்டும் என்ற சமாஜ்வாதி பாராளுமன்ற உறுப்பினரின் கோரிக்கை தொடர்பில் தி. மு. கவின் நிலைப்பாட்டை விளக்க வேண்டும் என்று தமிழக பா. ஜ. க., த. மா. கா. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் தி. மு. கவின் நிலைப்பாட்டை விளக்கும்படி தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை, த. மா. கா. தலைவர்ஜி. கே. வாசன் ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் மரபின் செங்கோல் இந்திய சுதந்திரத்துக்கும், நல்லாட்சிக்கும் ஆதாரம் என்று தமிழர்கள் உணரும்போது, இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் காங்கிரஸும், தி. மு. கவும் செங்கோலுக்கு எதிரான சமாஜ்வாதி கட்சியின் கருத்தை ஏற்றுக்கொள்கிறதா? என்பதை விளக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

# "நெருக்கடி நிலையை தி. மு. க. ஆதரித்ததா?"

நாமக்கல், ஜூன் 29

"நெருக்கடி நிலையை தி. மு. க. ஆதரித்ததா அல்லது எதிர்த்ததா என்பதை தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் விளக்க வேண்டும்"- இவ்வாறு பா. ஜ. க. மாநில பொதுச் செயலாளர் ராம. சீனிவாசன் கூறினார்.

நாமக்கல் மக்களவைத் தொகுதி பா. ஜ. க. நிர்வாகிகளுக்கு நன்றி அறிவிப்பு மற்றும் கட்சியின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற ராம.சீனிவாசன் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "ஓம் பிர்லா சபாநாயகராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருப்பது இந்தியா கூட்டணியினரை அதிர்ச்சியடைச் செய்துள்ளது. இந்த ஆட்சி தொடர்ந்து 5 ஆண்டுகளை நிறைவு செய்யும். மக்களவையில், அவசர நிலை பிரகடனத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு செலுத்தப்பட்ட மௌன அஞ்சலியில் கலந்து கொள்ளாமல் தி. மு. க., காங்கிரஸுடன் சேர்ந்து புறக்கணித்தது.- என்றார். (எ)

# "சட்டப்பேரவைக்குள் ஒளிந்துள்ள முதல்வர்"

வேலூர், ஜூன் 29

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய உயிரிழப்பு விவகாரத்தில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வருத்தம் தெரிவிக்காமல் சட்டப்பேரவைக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறார் என்று பா. ஜ. க. முன்னாள் தேசிய செயலாளர் எச். ராஜா சாடியுள்ளார்.

வேலூரில் பா. ஜ. க. தொண்டர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் ராஜா பங்கேற்றார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கள்ளக்குறிச்சியில் கள்ளச் சாராயம் அருந்தி 64 பேர் உயிரிழந்தனர். இந்த விவகாரம் குறித்து எதிர்க்கட்சிகள் பேசுவதற்குக்கூட அனுமதிக்காமல் அவர்களின் குரல்வளையை நெறிப்பது போல் சபாநாயகர் நடந்து கொண்டது ஜனநாயக மரபுக்கு எதிரானது.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஒன்றுக்கு தயாராக இருங்கள்!

## அரசாங்க ஊடகப் பிரிவுக்கு அறிவித்தது ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 29

**தேர்தல் ஒன்று அறிவிக்கப்படவுள்ளதால், அதற்கு தயாராகுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு தனது திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக அரசாங்க ஊடகப் பிரிவு அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி தேர்தல் செப்ரெம்பர் 17 முதல் ஒக்ரோபர் 16 வரை நடைபெறும் என சமீபத்தில் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இதன்படி ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் குறிப்பிட்ட காலத்துக்குள் கோரப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் ரத்நாயக்க அறிவித்தார்.

அவ்வாறானதொரு ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்தால் அதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் இருப்பதாக அரசாங்க ஊடகப் பிரிவு அதிகாரி கங்கானி லியனகே மேலும் குறிப்பிட்டார். (அ)

# விசேட சட்டத்தை செயல்படுத்தியேனும் கல்வி உரிமைகளைப் பாதுகாப்போம்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 29

"எதிர்காலத்தில், பாடசாலைக் கல்வி நேரத்தின்போது தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் ஈடுபட இடமளிக்கப்போவதில்லை என்றும் அவசரச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியேனும் மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்போம்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பலாங்கொடை ஸ்ரீ தர்மானந்த வித்யாயதன பிரிவெனாவுக்கு ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டிருந்தபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்நாட்களில் ஆசிரியர் சங்கங்களின் நடவடிக்கைகளால் ஆசிரியர் பணியின் மரியாதை கேள்விக்குறியாகியுள்ளது. கண்ணீர் புகைக்குண்டு தாக்குதலுக்கு மத்தியில் பாதுகாப்பு தரப்பினரின் தடைகளை தகர்த்துச் செல்லும் ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கு முன்னுதாரணமாக இருக்க முடியாது.

எனவே, எதிர்காலத்தில், பாடசாலைக் கல்வி நேரத்தின் போது தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட இடமளிக்கப் போவதில்லை. விசேட சட்டத்தை நடைமுறைப்படுத்தியேனும் மாணவர்களின் கல்வி உரிமையை பாதுகாப்போம்- என்றார். (அ)

# மாணவர்களுக்கு இடையே அடிதடி!

## ஒருவரின் கை முறிவு

கொழும்பு, ஜூன் 29

ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ பிரதேசத்தில் உள்ள பாடசாலையொன்றில் இரு மாணவர்களுக்கிடையில் பாடசாலையில் வைத்து இடம்பெற்ற மோதலில் மாணவரொருவர் காயமடைந்துள்ளார்.

மாணவரின் கை முறிவடைந்துள்ளது. பொகவந்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த மோதல் சம்பவம் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் காயங்களுக்குள்ளான மாணவனின் பெற்றோர் பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த இரு நாட்களாக அதிபர், ஆசிரியர்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்த போதிலும் நேற்று முன்தினம் மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று இருந்தனர்.

குறித்த பாடசாலையில் தரம் 07 இல் கல்வி பயிலும் இரண்டு மாணவர்களுக்கிடையில் வகுப்பறையில் வைத்தே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# மலையகத்தில் அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு ஐ. நா. திட்டம்!

கொழும்பு, ஜூன் 29

"ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் செயற்படுகின்ற நிறுவனங்கள், மலையக மக்களுக்கான அனைத்து ஒத்துழைப்புகளை வழங்கும் என இலங்கைக்கான ஐ.நா. வதிவிட பிரதிநிதி உறுதியளித்துள்ளார்" என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரேவிற்கும், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன் தினம் கொழும்பில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமாரும் கலந்து கொண்டார்.

மலையக மக்களுக்கு வதிவிட காணி உரிமை, வாழ்வாதார காணி உரிமை உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன், அவர்களும் இந்த நாட்டின் முழுமையான பிரஜைகளாக்கும் கொள்கையைத் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுத்து வருவதாக மனோ கணேசன் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, மக்கள் ஆணை கொண்ட அரசியல் பிரநிதிகளுடன் இணைந்து பணியாற்ற கூடிய மலையக சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்துக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதுமட்டுமல்லாது ஐ.நா நிறுவனங்களான, உணவு விவசாய நிறுவனம், யுனிசெப், உலக உணவு நிறுவனம் ஆகியவை ஊடாக தொழில்நுட்ப, அபிவிருத்தி, ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என இதன்போது மனோ கணேசன் இலங்கை ஐ.நா. வதிவிட பிரதிநிதியிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மதிலை உடைத்து பாய்ந்த பவுஸரால் இருவர் காயம்!



தம்பலகாமம், ஜூன் 29

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை - கண்டி பிரதான வீதியின் 98 ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது. கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த எரிபொருள் பவுசர் வாகனமே இவ்வாறு வீட்டு மதிலை உடைத்துக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தது.

தூக்க கலக்கம் காரணமாக இந்த விபத்து சம்பவம் இடம் பெற்றதாக ஆரம்பக் கட்ட விசாரணை மூலம் தெரியவருகிறது.

இதில் எரிபொருள் கொள்கலன் வாகனத்தைச் செலுத்திய சாரதி, உதவியாளர் ஆகிய இருவரே காயமடைந்தனர். இவர்கள் மதுகம பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

இந்த விபத்துச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# தாந்தாமலை முருகன் ஆலய பெருந்திருவிழா

தாந்தாமலை, ஜூன் 29

வரலாற்று பிரசித்தி பெற்ற தாந்தாமலை சிறீ முருகன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய பிரதம குருவும் தாந்தாமலை முருகன் ஆலயத்தின் பிரதம குருவுமான சச்சிதானந்தமூர்த்தி குருக்கள் தலைமையிலே பெருந்திருவிழா பூஜை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

ஜூலை 22 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் கதாப்பிரசங்கம் கூட்டு வழிபாடு மற்றும் கலை நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

மேலும் பக்த அடியார்களுக்கு விசேட பஸ் போக்குவரத்து சேவைகள் தினமும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் தினமும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (அ)

# யாழ்.போதனா வைத்தியசாலை அருகே சந்தேகத்திற்கிடமாக நின்ற கார் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 29

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வைத்தியசாலையின் 13ஆம் இலக்க மருந்தக வாயில் முன் பாக வைத்தியசாலை வாகனங்கள் சென்று வரத் தடையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளது.

கார் வாகனங்கள் சென்று வரத் தடையாக நின்றதை அடுத்து வைத்தியசாலை வட்டாரங்கள் குறித்த கார் உரிமையாளரைத் தேடியும் அவரை கண்டறிய முடியாததால் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அவ்விடத்துக்கு விரைந்த பொலிஸார் அருகில் உள்ள கடைகளில் உரிமையாளர் தொடர்பில் விசாரித்தும் உரிமையாளரைக் கண்டறிய முடியதமையால் காரினை அங்கிருந்து அகற்றிச் சென்றுள்ளனர். (அ)

# முட்டை உற்பத்தியை அதிகரிக்க புதிய திட்டம்!

கொழும்பு, ஜூன் 29

முட்டை உற்பத்தியை அதிகரிக்கப் புதிய திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அதன்படி தொழில்முனைவோருக்கு 160,000 கோழிக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நாட்டுக்குத் தேவையான மொத்த முட்டை மற்றும் பால் உற்பத்தியில் இன்னும் எம்மால் தன்னிறைவு அடைய முடியவில்லை.

2021ஆம் ஆண்டு உரப் பிரச்னையால் கால்நடைத் தீவனமான, சோள உற்பத்தி குறைந்ததால் கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை வளர்ப்பு பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், முட்டை உற்பத்தியை அதிகரிப்பதற்காகப் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலால்தான் மொட்டு கட்சியால் இன்று அரசியல் செய்ய முடிகிறது!

## சுட்டிக்காட்டுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூன் 29

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**


Prasanna

பக்குவமான பணியைச் செய்யக்கூடியவர் ஒரு நாட்டின் தலைவராக இருக்க வேண்டுமே தவிர தற்பெருமை பேசுபவராக இருக்கக்கூடாது என்றும் அமைச்சர் கூறினார்.

கம்பஹா மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் உடுகம்பொலவில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது கட்சி வேட்பாளரை முன் வைக்குமா என்ற உரையாடல் எழுந்தபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்போம் என்று கூறினேன். நாங்கள் ஜனாதிபதித் தேர்தலுக்கு எமது கட்சி வேட்பாளரை முன் வைக்குமா என்ற உரையாடல் எழுந்தபோது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்போம் என்று கூறினேன்.

நாங்கள் அனைவரும் 27 தேர்தல்களில் அவரை தோற்கடித்ததைப் போல, எங்களால் மட்டுமே அவரை வெற்றிபெறச் செய்ய முடியும். ஏன் அவரை வெற்றி பெற வைக்கிறோம்? ஏனெனில் இந்த நாட்டிற்கு வலுவான பலமான அரசாங்கம் தேவை.

மொட்டுக் கட்சியை உருவாக்கி பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தை கைப்பற்றிய எங்களுக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

அவ்வேளையில் எமது கட்சி உறுப்பினர்களைப் பாதுகாத்து அச்சமின்றி அரசியல் செய்வதற்குரிய சந்தர்ப்பத்தை ரணில் விக்கிரமசிங்க அவர்களே உருவாக்கினார். அதை நான் பயப்படாமல் சொல்வேன்.

மே 9 அன்று நடந்த சம்பவத்தால் நாங்கள் ஆதரவற்ற நிலையில் இருந்தோம். அப்போது தற்போதைய ஜனாதிபதி ஜனாதிபதியாக பதவியேற்ற சில மணி நேரங்களிலேயே போராட்டத்தை அடக்கினார். முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஷவும், மகிந்த ராஜபக்ஷவும் போராளிகளிடம் சிக்கியிருந்தால் இன்று நாம் அவர்களின் இறுதிச் சடங்குகளை கொண்டாடி இருப்போம். அமரகீர்த்தி எம்.பிக்கு என்ன நடந்ததோ அதுவே எங்களுக்கும் நடந்திருக்கும். பேரவாவியில் இறங்கியவர்கள் இங்கு இருக்கிறார்கள்.

நற் செய்தி என்று நாடு முழுவதும் சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது. அது நாணய நிதியம் பற்றிய சுவரொட்டி. இதனால் எதிரணியினர் கவலையடைந்துள்ளனர். 2023 மார்ச் 22 அன்று நாணய நிதியம் முதல் காசோலையை வழங்கியபோது நாடு முழுவதும் வேலைநிறுத்த அலைகளை நாங்கள் எதிர்கொண்டோம். அன்று போலவே இன்றும் நடக்கின்றது. பாராளுமன்றத்திற்கு தீ வைக்க முயற்சித்தவர்கள் இந்த நேரத்தில் நாட்டுக்கு கிடைத்திருக்கும் நற்செய்தியை எண்ணி எவ்வாறு கவலைப்படுகிறார்கள் என்பதை நீங்கள் தெளிவாக பார்க்க முடியும். நாணய நிதியம் கடன் கிடைத்தவுடன், நாடு இயல்பு நிலைக்குத் திரும்பும்.

நாட்டுக்கு நல்ல செய்தி வரும்போது, சுற்றுலாத்துறையை சீரகுலைக்கவும், வேலைநிறுத்தம் செய்யவும், பாடசாலைகளை மூடவும் பல்வேறு விஷயங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஆனால் நாணய நிதியம் இந்த தகவலைக் கொடுத்தவுடன், நாடு மீண்டும் இயல்பு நிலைக்கு வரும். மீண்டும் முதலீட்டாளர்கள் நாட்டுக்கு வரும்போது, கட்டுநாயக்க விமான நிலையத்தின் அபிவிருத்தி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது -என்றார்.

(அ)

# இணையம் ஊடாக நிதி மோசடி 115 இந்தியப் பிரஜைகள் கைது!

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் இருந்து இணையத்தளம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 115 இந்தியப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பல பகுதிகளில் முன்னெடுத்த சுற்றிவளைப்புக்களின் போது குறித்த 115 பேரும் கைதாகினர்.

தலங்கம, மாதிவெல மற்றும் நீர்கொழும்பு - கொச்சிக்கடை ஆகிய பகுதிகளில் வைத்து இவர்கள் கைதாகினர். கைதானவர்களிடம் இருந்து மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, இணையத்தளம் ஊடாக நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் கடந்த திங்கட்கிழமை நீர்கொழும்பு - கொச்சிக்கடை பகுதியில் வைத்து 33 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைதானவர்கள் பாகிஸ்தான், நேபாளம், மலேசியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஷ்யா-உக்ரைன் போரில் 17 இலங்கையர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 29

ரஷ்யா-உக்ரைன் போரில் இலங்கையை சேர்ந்த 17 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு உரிய இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ரஷ்யாவுக்கு அழைப்பு விடுத்துள்ளதாவும் குறிப்பிடப்படுகின்றது.

ரஷ்யா-உக்ரைன் இடையேயான போர் 2 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இந்த போரில் இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கான இராணுவ சிப்பாய்களின் உயிர்கள் பறிபோயுள்ளன.

இந்நிலையில், குறித்த இரு நாடுகளும் வெளிநாடுகளிலிருந்து தமது நாட்டு இராணுவத்துக்கு ஆட்களைச் சேர்த்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதிக சம்பளம், பாதுகாப்பு உதவியாளர் வேலைவாய்ப்பு என பொய்யான வாக்குறுதிகளை வழங்கி, ரஷ்யா தனது இராணுவத்தில் ஆட்களை இணைத்து வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

அவ்வாறு சேர்க்கப்படும் நபர்களுக்கு வலுக்கட்டாயமாக போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களின் விருப்பத்திற்கு எதிராக போர் முனைக்கு அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோய் பரவல் உக்கிரமான நிலையில்

## சிறுவர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 29

நிலவும் மழை நிலைமை காரணமாக டெங்கு நோய் பரவல் மிகவும் உக்கிரமான நிலைக்கு அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் அறிக்கையின்படி, கம்பஹா மாவட்டத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களில் மேல் மாகாணத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவற்றுள் கொழும்பு நகரப் பகுதியிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

கம்பஹா, களுத்துறை, கண்டி, இரத்தினபுரி, குருநாகல், காலி போன்ற பிரதேசங்கள் டெங்கு பரவும் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த ஆபத்தான சூழ்நிலையில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்கு பொதுமக்களின் கவனமும் ஆதரவும் மிகவும் அவசியமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

டெங்கு நோயின் பரவலை விரைவாகக் கட்டுப்படுத்தாவிடின், இன்னும் சில மாதங்களிலேயே இலங்கையில் டெங்கு தொற்றுநோயாக மாறுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிலருக்கு எந்த அறிகுறிகளும் காணப்படுவதில்லை. மேலும் சிலருக்கு டெங்கு தொற்று ஒரு சாதாரண வைரஸ் தொற்றாகக் காணப்படுகிறது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த நாட்களில் சிறு பிள்ளைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது அவசியமானது எனவும், சிறுவர்கள் மற்றும் பெரியவர்கள் இருவருக்குமே காய்ச்சல் இருந்தால், அவர்கள் ஆரம்பம் முதலே ஓய்வில் இருக்க வேண்டும் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு பல்கலைகளின் சகல செயல்பாடுகளும் பாதிப்பு

கொழும்பு, ஜூன் 29

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கைகளினால் பல்கலைக்கழகங்களில் நீர், மின்சாரம் மற்றும் இணைய வசதிகள் என அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் விஷாக சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு காரணமாக சுமார் இரண்டு மாதங்களாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இணைய வசதிகள் ஒரு மாதமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக மாணவர்களுக்கான விரிவுரைகளை முறையாக நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் பல்கலைக்கழக வளாகங்களில் நீர் மற்றும் மின்சாரத் தடை காரணமாக பல் வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், விடயத்துக்கு பொறுப்பான அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும், மௌனமாக இருந்தால் பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் தொடர்ந்தும் பாதிக்கப்படும் என்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் விஷாக சூரிய பண்டார மேலும் கூறினார். (அ)

# இலங்கையின் சூரியசக்தி உற்பத்தி 1,000 மெகா வாட்ஸைத் தாண்டியது!

கொழும்பு, ஜூன் 29

இலங்கையின் தேசிய மின் அமைப்புடன் இணைக்கப்பட்ட மொத்த சூரிய சக்தி மின் உற்பத்தி 1,000 மெகா வாட்டைத் தாண்டியுள்ளதாக மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

944 மெகாவாட் கூரை சூரிய சக்தி பனல்களும் 156 மெகா வாட் நிலத்தடி சூரிய சக்தி பனல்களும் தேசிய மின் அமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டு இறுதிக்குள், கூரை சூரிய சக்தி பனல்கள் மூலம் 1,000 மெகாவாட்களுக்கு மேல் தேசிய மின் அமைப்புடன் சேர்க்கப்படும்.

மின்சார சபையின் நீண்டகால உற்பத்தித் திட்டத்தின் படி, அடுத்த 4 ஆண்டுகளில் கூரை சூரிய சக்தி பனல்கள் மூலம் தேசிய மின் அமைப்புடன் ஒவ்வொரு ஆண்டும் 150 மெகாவாட் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருடத்தின் முதல் 5 மாதங்களில் மட்டும் 132 மெகாவாட் கூரை சூரிய சக்தி பனல்கள் தேசிய மின் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ளதாக மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனிய மண் அகழ்வுக்காக நிலங்களை இழந்தவர்கள் உடன் தொடர்பு கொள்க!

## மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள்

மன்னார், ஜூன் 29

**மன்னாரில் கனிய மண் அகழ்வுக்காக நிலத்தை இழந்தவர்கள் மன்னார் பொது அமைப்புகளின் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவ் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இவ்விடயம் தொடர்பாக அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்-

மன்னார் நகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கனிய மண் அகழ்விற்காக உள்ளூர் காணி முகவர்கள் மூலம் சட்ட விரோதமான முறையில் காணி அபகரிக்கப்படுவதாக பல்வேறு விதமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

சில குழுக்கள் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியும் அதிகாரத்தை உபயோகித்தும் சாதாரண மக்களின் காணிகளை அபகரித்து வருவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

அத்துடன் பயன் படுத்தப்படாத நிலங்களுக்கு ஆட்சி உறுதிகளையும் எழுதுவதாகவும் கூறுகின்றனர்.

அது மாத்திரமின்றி சில காணிகளுக்கு பயன்பாட்டில் இல்லாத வேறு உறுதிகளை எல்லைகளை மாற்றி குறித்த இடங்களில் நில அபகரிப்பிலும் ஈடுபடுகின்றனர். எனவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் ஆதாரங்களோடு குற்றம் சாட்டுகின்றனர்.

இதில் இவ்வாறு முறைகேடான உறுதிப்பத்திரம் தயாரிப்புகளை சில சட்டத்தரணிகள் மேற் கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் கவலை தெரிவிக்கின்றனர்.

ஆகவே சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த சட்டத்தரணிகள் சாமானிய மக்களின் இருப்பு உரிமையாகிய நிலத்தை விற்பதற்கு இவ்வாறான மோசடி கும்பலுக்கு ஆதரவாக செயல்படுவது என்பது மிகவும் வேதனைக்குரிய விடயம்.

இவ்வாறு பாதிக்கப் பட்டிருக்கின்ற மக்கள் எங்களோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இந்த மோசடி கும்பலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குரிய வேலைகளில் ஈடுபட்டு வருகிறோம்-என்றுள்ளது. (அ)



# தெற்கு அதிவேக வீதியில் விபத்து

கொழும்பு, ஜூன் 29

தெற்கு அதிவேக வீதியில் 26 கிலோ மீற்றர் மைல் கல்லுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

செயலிழந்த லொறி ஒன்றின் பாதுகாப்புக்காக லொறிக்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப் வண்டி ஒன்றின் பின்புறத்தில் கார் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காரின் சாரதி தொலைபேசி அழைப்பில் பேசிக்கொண்டு கவனக் குறைவாகக் காரை செலுத்தியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது காரின் சாரதி காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)




# தெற்கு அதிவேக வீதியில் லொறி கவிழ்ந்து விபத்து

## இருவர் காயம்

கொழும்பு, ஜூன் 29

தெற்கு அதிவேக வீதியில் 64.7 கிலோ மீற்றர் மைல் கல்லுக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

கொழும்பு நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியை விட்டு விலகி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதி உறங்கியதால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின்போது லொறியில் ஐந்து பேர் பயணித்துள்ள நிலையில் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாகொடை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# யாழில் மிக்ஸருக்குள் பல்லி; 15 ஆயிரம் ரூபாய் தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 29

செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் விற்கப்பட்ட மிக்ஸரில் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டமை தொடர்பில் நடைபெற்ற வழக்கு விசாரணையில், மிக்ஸரை விற்பனை செய்த நபருக்கு 15ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்நிதி ஆலயத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு, ஆனிப் பொங்கல் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் ஆலயத்திற்கு வருகை தந்த ஒருவர், ஆலயச் சூழலில் உள்ள இனிப்புக் கடை ஒன்றில் மிக்ஸரை வாங்கிய போது, அதனுள் பொரித்த நிலையில் பல்லி ஒன்று காணப்பட்டுள்ளது.

அது தொடர்பில் அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பல்லியுடன் காணப்பட்ட மிக்ஸரை சான்றுப்பொருளாக பெற்றுக்கொண்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குறித்த இனிப்புக் கடைக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை, மிக்ஸரை விற்பனை செய்த நபரை கடுமையாக எச்சரித்த மன்று அவருக்கு 15ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (அ)

# நாய்க் கடிக்கு உள்ளானால் உடனே சிகிச்சை பெறுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 29

நாய் கடித்தால் உடனடியாக வைத்திய சிகிச்சை பெறவேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு மக்களுக்கு தேவை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஜமுனானந்தா தெரிவித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்-

விசர் நாய் கடிக்கு உள்ளான கிளிநொச்சியை சேர்ந்த 4 வயதான சிறுமி கடந்த புதன்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விசக் கடியால் தீண்டப்பட்டால், 5 நிமிடங்களுக்கு நீரினால் நன்றாக கழுவவேண்டும். சவர்க்காரம் இட்டும் கழுவலாம். பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

வைத்தியர்களிடம் நாய் அல்லது பூனை தொடர்பாக முழு விவரத்தை தெரிவிக்க வேண்டும். தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட நாய்கள் கடிக்கும்போது அதில் கிருமிகள் இருக்காது.

ஆனால் தெரு நாய்கள் கடிக்கும்போது கொஞ்சம் அவதானமாக இருக்கவேண்டும்-என்றார்.

# நீரில் மூழ்கி மூதாட்டி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 29

பலாங்கொடை தொரவல ஆற்றில் நீராடச் சென்ற பெண் ஒருவர் நேற்று முன் தினம் இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன் தினம் மாலை குறித்த ஆற்றிற்கு நீராடச் சென்ற சந்தர்ப்பத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பலாங்கொடை முகுனுமலை பிரதேசத்தைச் சேர்ந்த 80 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் நேற்று முன் தினம் மாலை ஆற்றிற்கு நீராடச் சென்ற சந்தர்ப்பத்தில் காணாமல்போனதை அடுத்த உறவினர்கள், பிரதேச மக்கள் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தர்ப்பத்திலேயே குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பலாங்கொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைகளில் தரமற்ற உணவு பொருள்கள் விற்பனை

## நாடு முழுவதும் தீவிர சோதனை

கொழும்பு, ஜூன் 29

பாடசாலைகளில் காணப்படும் சிற்றுண்டிச்சாலைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

அவ்வாறான சிற்றுண்டிச் சாலைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்த குமார் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அறிவித்தல் வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையானின் ஆட்டம் விரைவில் அடக்கப்படும்

## கூறுகிறார் அநுரகுமார திஸநாயக்க

மட்டக்களப்பு, ஜுன் 29

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சுதந்திரமாக எமது கருத்துகளை தெரிவிக்க முடியாத வகையில் பிள்ளையான் போன்றவர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. எமது ஆட்சி விரைவில் உருவாகும். அப்போது, இவ்வாறான நிலைமைகள் நிச்சயம் மாற்றப்படும். அச்சுறுத்தும் அரசியல்வாதிகள் அடக்கப்படுவார்கள்- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.**



முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பெயரை வைத்தே சஜித் பிரேமதாஸ கட்சியின் தலைவராகயிருக்கின்றார். அவரது தந்தை ஒரு முன்னாள் ஜனாதிபதியாக இல்லாமலிருந்தால் மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினராக கூட வருவதற்கு சஜித் பிரேமதாஸவுக்கு தகுதியில்லை என்றும் அநுர குறிப்பிட்டார். இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட மாநாடு நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள வில்லியம் மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் அநுர மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த நாட்டில் மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர். அந்த மாற்றம் எங்கு ஏற்படவேண்டும் என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள். இன்று ரணிலுக்கு மாற்றத்துக்காக சிலர் ஆதரவு தெரிவிக்கின்றனர். ஆனால், ரணிலுக்கான ஆதரவை இன்னும் மொட்டுக் கட்சி தெரிவிக்கவில்லை. இன்னும் தீர்மானம் எடுக்கவில்லையென மகிந்த ராஜபக்ஷ சொல்கின்றார். பஸில் ராஜபக்ஷவிடம் கேட்டாலும் இன்னும் தீர்மானம் எடுக்க வில்லை என்கினறார்.

தீர்மானம் எடுத்தவர்கள் சிலர் இருக்கின்றார்கள். அவர்கள் யார் என்று பார்த்தால் அதில் ஒருவர் மகிந்தானந்த அளுத்கமகே. இவர் ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக கூறியிருக்கின்றார். இவர் யார் என்று அனைவருக்கும் தெரியும். அடுத்து ரொஹான் ரத்வத்தை ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக கூறுகின்றார். இவர்தான் சிறைச்சாலை அமைச்சராகயிருந்த போது சிறைச்சாலைக்கு சென்று தமிழ் அரசியல் கைதிகளை துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தி மண்டியிட வைத்தவர். அவர் மாற்றத்துக்காக ரணிலுக்கு ஆதரவு வழங்குகின்றாராம். அதேபோன்று கப்பம் வாங்கி உயர்நீதிமன்றில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட பிரசன்ன ரணதுங்க இன்று ரணிலுக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்றார்.

இதேபோன்று, மட்டக்களப்பிலும் மாற்றத்துக்காக ரணிலுக்கு ஆதரவு வழங்கப்படும் என பிள்ளையான் அறிவித்துள்ளார். மாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு முன்பாக மாற்றமான தலைமைத்துவம் ஒன்று தேவையாகும்.

பல தசாப்தமாக இந்த நாட்டினை ஆட்சி செய்து, பல ஆண்டுகளாக அமைச்சர்களாகயிருந்து பல ஆண்டுகளாக பிரதமராகயிருந்தவர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள். இவர்களது மாற்றம் என்னவாக இருக்கும் என்பது அனைவருக்கும் தெரியும். மக்களின் எதிர்பார்ப்பு ஒரு மாற்றமாகயிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவால் அந்த மாற்றத்தை கொண்டு வரமுடியாது.

அதேபோன்று சஜித் பிரேமதாஸவாலும் பொதுமக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை வழங்க முடியாது. சஜித் பிரேமதாஸ முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகனாக இல்லாவிட்டால் என்ன நடந்திருக்கும். அவர் ஒரு கட்சியின் தலைவராகவும் ஜனாதிபதி வேட்பாளராகவும் இருப்பதற்கு அவரிடம் உள்ள ஒரேயொரு தகுதி அவரது தந்தை ஜனாதிபதியாக இருந்தது மாத்திரமேயாகும்.

அவரைப்பற்றி சரத் பொன்சேகாவே பேசுகின்றார். அவர் ஆட்சிக்காலத்தில் சரத் பொன்சேகாவினை மேடையில் வைத்துக்கொண்டு திருடர்களை பிடிக்கப்போவதாக கூறினார். ஆனால் அவர் ஆட்சிக்காலத்தில் சஜித் பிரேமதாஸவையே கசினோ விடயத்தில் பிடித்திருந்தார்.

மாற்றம் ஒன்று வேண்டுமென்றால் அந்த மாற்றத்தை செய்யக் கூடியவர்கள் யார் என்றால் தேசிய மக்கள் சக்தியினர் மட்டுமேயாகும். இந்த நாட்டு மக்கள் மீண்டும் அந்த மிகமோசமான பாதையில் செல்லமாட்டார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம்.

இந்த நாட்டில் இனவாதம் மிகப்பெரும் பிரச்னையாக மாறியிருக்கின்றது. இந்த நாட்டில் உள்ள முழு அரசியலும் இனவாதத்தை அடிப்படையாக கொண்டே செயல்படுகின்றது. வடக்கில் ஓர் அரசியல் தெற்கில் ஓர் அரசியல் கிழக்கில் ஓர் அரசியல் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த நாட்டினை ஐக்கியப்படுத்துவதற்கான அரசியல் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நாட்டில் கோட்டாபயவின் வெற்றியானது முஸ்லிம் மக்களுக்கு எதிரான அரசியலிலேயே கிடைத்தது.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களை வேறுபடுத்துகின்ற அரசியலுக்குப் பதிலாக அனைவரையும் ஒற்றுமைப்படுத்துகின்ற அரசியலே செய்ய வேண்டியுள்ளது. அந்த மாற்றத்தினையே தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்கும். இந்த நாட்டில் இனவாத ரீதியான அரசியலை நாங்கள் முறியடிப்போம்.

இந்த நாட்டுக்கு புதிய அரசியல் ஒன்று தேவையாகும். மக்கள் பணத்தை சூறையாடுவது முற்றாக நிறுத்தப்படும். மக்கள் பணத்தை வீணடிக்காத அரசியல் முன்னெடுக்கப்படும். நீதித்துறைக்கு அடிபணியும் அரசியல் அந்த மாற்றத்தினையே நாங்கள் கொண்டு வருவோம். தற்போதுள்ள அரசியலானது குற்றவாளிகளைப் பாதுகாக்கும் அரசியலாகவே உள்ளது.

கடந்த காலத்தில் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் நடைபெற்றது. அது தொடர்பில் ஆராய்ந்துசென்றால் இந்த ஒட்டுக்குழுக்கள் பற்றிய விடயங்கள் வெளியேவந்தன. சட்டரீதியாகவுள்ள இராணுவம் மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்க முடியும். வேறு யாரும் ஆயுதங்களை வைத்திருக்க முடியாது. அவை களையப்பட வேண்டும் என அநுர மேலும் தெரிவித்தார்.

# மாணவனின் வயிற்றை கிழித்த இரண்டடி நீள தடி மீட்கப்பட்டது

கல்முனை, ஜுன் 29

பனை மரத்திலிருந்து கீழே தவறிவீழ்ந்த போது, பாடசாலை மாணவனின் வயிற்றில் குத்திய இரண்டடி நீளமுள்ள தடி மீட்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனையில் உயிருக்குப் போராடிய நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை சேர்க்கப்பட்ட இந்த மாணவனுக்கு பல மணி நேரம் அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் குறித்த மாணவன் உயிர் பிழைத்தார்.

கல்முனை நாவிதன்வெளி பிரதேசத்தைச் சேர்ந்த, 18 வயது பாடசாலை மாணவன் நுங்கு பறிப்பதற்காக பனை மரத்தில் ஏறிய போது தவறி விழுந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த இடத்தில் பயிற்றம் செடிக்கு நாட்டப்பட்டிருந்த கிளிசரியா மரத்தின் கம்பு குறித்த மாணவனின் குத வழியாக பாய்ந்து சலப்பை, ஈரல், நுரையீரல், பிரிமென்தகடு உட்பட உடலின் முக்கிய பாகங்களாக காணப்படுகின்ற 15 பாகங்களை கிழித்துக் கொண்டு மார்பக பக்கமாக குறித்த தடி வெளியில் தெரிந்துள்ளது.

சம்பவத்தை கேள்வியுற்று அவசர சிகிச்சை பிரிவுக்கு விரைந்து சென்ற மருதமுனையை சேர்ந்த பிரபல அறுவை சிகிச்சை மருத்துவ நிபுணர் எம். சமீம் தலைமையிலான மருத்துவ குழுவினர் குறித்த இளைஞரின் உயிருக்கு ஆபத்து இல்லாத வகையில், பல மணி நேர அறுவை சிகிச்சையின் பின்னர் இரண்டடி நீளமுடைய தடியை வயிற்றுப் பகுதியில் இருந்து வெற்றிகரமாக அகற்றியுள்ளனர். தற்போது குறித்த இளைஞன் ஆரோக்கியமான நிலையில் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ)



# வலம்புரி சங்குடன் மூவர் கைதாகினர்

திருகோணமலை,ஜுன் 29

திருகோணமலை, சேருநுவர பிரதேசத்தில் வலம்புரி சங்குகளுடன் மூவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது கைதாகினர்.

பலாங்கொடை, ரம்புக்கனை மற்றும் பஸ்ஸர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 36 முதல் 50 வயதுக்குட்பட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து மூன்று வலம்புரி சங்குகள் கைப்பற்றப்பட்டன.

இவ்வாறு கைதான சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சேருநுவர பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)

# தாய், மகளை கத்தியால் குத்திவிட்டு தப்பிக்க முயன்ற குடும்பஸ்தர் கைது

தம்பலகாமம், ஜுன் 29

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஈச்ச நகர் பகுதியில் தாய் மற்றும் மகளை கத்தியால் குத்தி தாக்கிவிட்டு, பெண் வேடமிட்டு தப்பிக்க முயன்ற நபரை கைது செய்துள்ளதாக தம்பலகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

மூதூரை சேர்ந்த தம்பலகாமம் ஈச்ச நகர் பகுதியில் திருமணம் முடித்து வசித்து வரும் 38 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த தாய் (வயது- 54) மட்டக்களப்பு பொது மருத்துவமனையிலும், மகள் (வயது- 31) கந்தளாய் தள மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் கூறினர்.

கத்திக்குத்துக்குள்ளான தாயிடம் கத்திக்குத்தை மேற்கொண்ட நபர் கடனுக்குப் பணம் வாங்கியுள்ளார்.

இந்த நிலையில் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்காக தாக்குதல் தாரியின் தொலைபேசி திருத்தும் கடைக்கு கத்திக் குள்ளான பெண் சென்று கேட்டுள்ளார்.

அதன் பின்னரே சந்தேக நபர் அந்த தாயின் வீட்டுக்குச் சென்று அவரையும் அவரது மகள் மீதும் கத்திக் குத்து தாக்குதலை நடத்தியுள்ளார்.

தாக்கிய நபர், அங்கிருந்த தப்பிச் செல்வதற்காக முகத்தை மூடி ஹபாயா அணிந்து வெளியே செல்ல முயற்சித்த வேளையிலேயே, சம்பவ இடத்துக்கு விரைந்த தம்பலகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் தம்பலகாமம் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை மக்களுக்கு எதிராக இந்தியாவில் தாக்குதல் அதிகரிப்பு

## அமெரிக்க வெளியுறவுத்துறை அறிக்கை

வாஷிங்டன், ஜூன் 29

**இந்தியாவில் மதமாற்றத் தடுப்புச் சட்டங்கள், வெறுப்பு பேச்சு மற்றும் சிறுபான்மை மதத்தைச் சேர்ந்தவர்களின் வீடுகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன- இவ்வாறு அமெரிக்க வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

2023 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச் சுதந்திரம் குறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை ஆய்வறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்தியாவில் 10 மாநிலங்களில் மதமாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான தடைச்சட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளது. இதில் சில மாநிலங்களில், திருமண நோக்கத்துக்காக கட்டாய மத மாற்றங்களுக்கு எதிராக அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

மதச் சிறுபான்மை குழுக்களின் சில உறுப்பினர்கள், வன்முறையில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும், மதச் சிறுபான்மை குழுக்களின் உறுப்பினர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கும், அவர்களின் மதம் அல்லது நம்பிக்கை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மத சமூகங்களுக்கு தனித் தனி தனிநபர் சட்டங்கள் அமைப்பதற்குப் பதிலாக, நாடு முழுவதும் ஒரே மாதிரியான



சிவில் சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி வருகிறார். இந்த முயற்சியை முஸ்லிம், சீக்கியர், கிறிஸ்தவர், மற்றும் பழங்குடியின தலைவர்கள் மற்றும் சில மாநில அரசு அதிகாரிகள் எதிர்த்தனர். இது நாட்டை இந்து தேசமாக மாற்றும் திட்டத்தின் ஒரு பகுதி என்ற அடிப்படையில் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்- இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பெண்களின் உரிமைகள் தொடர்பில் தலிபான்களிடம் கேள்வி எழுப்பப்படும்

## ஐ. நா. துணை பொதுச் செயலர்

நியூயோர்க், ஜூன் 29

ஐ. நா. கூட்டத்தில் பங்கேற்கும் ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்களிடம் பெண்களின் உரிமைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்படும் என்று ஐ. நா. துணை பொதுச் செயலர் ரோஸ்மேரி டிகார்லோ தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சியாளர்கள் மற்றும் 25 நாடுகளின் தூதுவர்கள் பங்கேற்கும் முதல்கூட்டம் எனது தலைமையில் நடைபெறவுள்ளது. அடிப்படை உரிமை சம்பந்தப்பட்ட விவகாரங்களில் ஆப்கான் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்காதது குறித்து சர்வதேச அளவில் கடுமையான கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, ஞாயிற்றுக்கிழமை தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள தலிபான் மற்றும் பிறநாடுகளின் தூதுவர்கள் பங்கேற்கும் கூட்




டத்தில் பெண் உரிமை தொடர்பான கேள்விகள் ஒவ்வொரு அமர்வின்போதும் ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்களிடம் எழுப்பப்படும். சர்வதேச சட்டங்களை கடைப்பிடித்து அண்டை நாடுகளுடன் சமாதானமாக இருப்பதை உறுதி செய்வதற்கான படிப்படியான செயல்முறையை முன்னெடுக்க இந்த கூட்டம் நல்ல தொடக்கமாக அமையும்.

ஐரோப்பிய ஒன்றியம், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, அமெரிக்கா, சீனா மற்றும் பல ஆப்கானிஸ்தான் அண்டைநாடுகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளன- என்றார். (எ)

# சர்வதேச விண்வெளி நிலையத்தை அப்புறப்படுத்துகிறது ஸ்பேஸ்எக்ஸ்



நியூயோர்க், ஜூன் 29

பூமியில் இருந்து சுமார் 400 கிலோ மீற்றர் தொலைவில் விண்வெளியில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது சர்வதேச விண்வெளி நிலையம். அதனை அங்கிருந்து அப்புறப்படுத்தும் பணியை எலான் மஸ்கின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் வசம் ஒப்படைத்துள்ளது நாசா.

இந்தப் பணிக்காக ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் சுமார் 843 மில்லியன் டொலர்களை பெறுகிறது. விண்வெளியில் உலா வரும் சர்வதேச விண்வெளி நிலையத்தை சிக்கலின்றி பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்தும் பணிக்காக பிரத்தியேக விண்கலன் ஒன்றை ஸ்பேஸ்எக்ஸ் கட்டமைக்க உள்ளது.

அந்த விண்கலனை கொண்டு பூமியின் சுற்றுவட்டப் பாதையில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையம் அப்புறப்படுத் தப்படும். அதன் பின்னர் அந்த விண்கலனும், சர்வதேச விண்வெளி நிலையமும் வளிமண்டலத்தில் நுழையும் போது அவை இரண்டும் உடைந்து எரியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை நாசா உறுதி செய்துள்ளது. (எ)

# உளவு பார்த்த வழக்கு முடிந்தது ஆஸி. திரும்பினார் அசாஞ்சே!

கன்பெரா, ஜூன் 29

அமெரிக்க இராணுவ இரகசியங்களை உளவு பார்த்த வழக்கில் விடுவிக்கப்பட்டதையடுத்து, விக்கிலீக்ஸ் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே தனி விமானம் மூலம் அவுஸ்திரேலியா திரும்பினார்.

அமெரிக்க இராணுவத்தின் போர்க்குற்றம், மனித உரிமை மீறல், ஊழல் தொடர்பான ஆவணங்களை இரகசியமாக திருடி விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் அதன் நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே வெளியிட்டது உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அமெரிக்க அரசின் நெருக்கடி காரணமாக இங்கிலாந்தின் ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த அசாஞ்சே 2019இல் கைது செய்யப்பட்டு லண்டன் சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில், அமெரிக்க நீதித்துறையுடன் அசாஞ்சே ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டார். இதன்படி, அமெரிக்க இராணுவ இரகசிய ஆவணங்களை விக்கிலீக்ஸில் வெளியிட்ட



குற்றத்தை ஒப்புக்கொண்டு, நீதிமன்றில் முன்னிலையாவதாக ஒப்புக்கொண்டார்.

அமெரிக்காவின் வடக்கு மரியானா தீவுகளின் தலைநகரான சைபானில் உள்ள நீதிமன்றத்துக்கு லண்டனிலிருந்து தனி விமானத்தில் வந்த அசாஞ்சே நீதிபதிகள் முன்பு ஆஜரானார். அப்போது, அவர் உளவு வேலையில் ஈடுபட்ட குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனையடுத்து, அசாஞ்சேவுக்கு 5 ஆண்டு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அசாஞ்சே ஏற்கனவே இங்கிலாந்து சிறையில் தண்டனையை அனுபவித்து விட்டதால் அவரை விடுவிப்பதாக நீதிமன்றம் அறிவித்தது.

இதனையடுத்து, அசாஞ்சே அதே தனி விமானத்தில் மரியானா தீவில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு புறப்பட்டார். அப்போது, அவருடன் அமெரிக்காவுக்கான அவுஸ்திரேலிய தூதுவர் கெவின் ரூட் மற்றும் இங்கிலாந்துக்கான தூதுவர் ஸ்டீபன் ஸ்மித் ஆகியோரும் உடனிருந்தனர். அசாஞ்சேவை விடுவிக்க நடத்தப்பட்ட பேச்சுகளில் இந்த இருவரும் முக்கிய பங்கு வகித்தனர். தனி விமானத்துக்கான ஏற்பாட்டை அசாஞ்சே குழுவே ஏற்றுக் கொண்டது. இந்த விமானம் நேற்று முன்தினம் அவுஸ்திரேலியா தலைநகர் கன்பெராவை வந்தடைந்தது.

இதுகுறித்து அவுஸ்திரேலிய பிரதமர் அல்பனீஸ் பாராளுமன்றத்தில் கூறுகையில், "லண்டன் சிறையில் 5 ஆண்டுகள் அடைக்கப்பட்ட அசாஞ்சேவை அமெரிக்காவுக்கு நாடு கடத்துவதை எதிர்த்து நடத்தப்பட்ட உறுதியான, கவனமான, பொறுமையான போராட்டத்துக்கு தற்போது நல்ல பலன் கிடைத்துள்ளது. நாங்கள் பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் இப்பிரச்னையை தீர்த்து வைத்துள்ளோம்" - என்றார். (எ)

# அதீத வெப்பத்தால் உருகும் ஆபிரகாம் லிங்கனின் சிலை

வாஷிங்டன், ஜூன் 29

அமெரிக்காவின் வாஷிங்டனில் ஆரம்பப் பாடசாலைக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள ஆபிரகாம் லிங்கனின் மெழுகு சிலை உருகி வருகிறது. அங்கு நிலவி வரும் அதீத வெப்பம் இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது உருகி வரும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனின் ஆறு அடி மெழுகு சிலை அவரது நினைவிடத்தில் வைக்கப்பட்டுள்ள சிலையை போலவே வடிவமைக்கப்பட்டதாகும். அந்த சிலையின் தலை பகுதி, கால்கள் தற்போது உருகியுள்ளன. கடந்த சனிக்கிழமை அன்று சுமார் 100 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் அங்கு நிலவியதாக வானிலை மைய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த பிப்ரவரி மாதம்தான் இந்த வெள்ளை நிற மெழுகு சிலை வடமேற்கு வாஷிங்டன் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக்கு வெளியே நிறுவ



பட்டுள்ளது. இதனை அமெரிக்க கைவினை கலைஞர் சாண்டி வில்லியம்ஸ் வடிவமைத்துள்ளார். சிலையின் தலை பகுதி உருகிய நிலையில் அது கீழே விழுந்து சேதமடையாத வகையில் அதனை பத்திரப்படுத்தி உள்ளனர். மேலும், சிலை வடிவமைப்பு பணிக்கு பயன்படுத்தப்பட்டுள்ள மெழுகு சிலை 140 டிகிரி வெப்பம் வரை தாங்கும் தன்மை கொண்டது என்றும் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் தான் அந்தச் சிலை தற்போது உருகி வருகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பு செயல்முறை நன்மை பயக்கும் என்றால் ஆதரவு!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 29

**"கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டிற்கு நன்மை பயக்கும் என்றால், அதற்கு ஆதரவை வழங்குவோம்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

களுத்தறை, புலத்சிங்கல மதுராவல, ரெமுன மகா வித்தியாலத்தில் நேற்று நடைபெற்ற பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாணய நிதிய திட்டம் மற்றும் கடன் மறுசீரமைப்புத் திட்டங்கள் குறித்து பல விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. கடன் மறுசீரமைப்பு செயல்முறை நாட்டுக்கு நன்மை பயக்கும் என்றால், அதற்கு ஆதரவை வழங்குவோம். எனினும் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

2028 வரை கடனை செலுத்துவதற்கு கால அவகாசம் விதிக்கப்பட்டுள்ளது. 2028 முதல் கடன் தவணைகளைச் செலுத்த வேண்டும். இது ஒரு நல்ல விடயம் போல் தெரிந்தாலும், நாணய நிதியத்தின் 2023 மார்ச் அறிக்கை கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின்படி, நாம் 2033 முதலே கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும்.

நாணய நிதிய அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், இந்த இணக்கப்பாட்டு கலந்துரையாடலினால் 2033 இலக்கை எட்ட முடியாது போயுள்ளது. மேலும், சகல நாடுகளையும் விட நமது நாடு கடன் மறுசீரமைப்புச் செயல்முறையை வேகமாக பூரத்தி செய்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது முற்றிலும் தவறான கருத்தாகும். எமது நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை இன்னும் முடிவடையவில்லை. செயல்முறையை முழுமைப்படுத்தாமல் இவ்வாறு மக்களிடம் பொய் சொல்வது தவறாகும். எம்மை விட வேகமாக தங்கள் கடனை மறுசீரமைப்புச் செயல்முறையை முழுமையாக மறுகட்டமைத்த பல நாடுகள் உள்ளன.

நமது நாட்டில் வட்டி குறைப்புக்கான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. வட்டியையும் கந்துவட்டியையும் செலுத்த வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது. ஒரு நாடாக நாம் ஒரு முழுமையான இணக்கப்பாட்டை எட்டவில்லை. சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் அடங்களாக சர்வதேச வணிகக் கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை.

இந்த கலந்துரையாடல்கள் ஜூலை 3 ஆம் திகதி வரை தொடர்கிறது. இறுதி இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், எமது நாட்டுக்கு எதிராக வழக்குத் தொடரவும் குறித்த தரப்பினர் தயார் நிலையில் உள்ளனர்- என்றார்.

(அ)



# உயிரிழந்த கடற்படை சிப்பாய்க்கு அமைச்சர் நேரில் சென்று அஞ்சலி

கொழும்பு. ஜூன் 29

நெடுந்தீவு கடற்பரப்பில் இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையின் போது, உயிரிழந்த கடற்படை வீரரின் இறுதிக் கிரியைகளில் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய படகொன்றை வழிமறித்து, படகில் இருந்தவர்களை கடற்படையினர் கைது செய்ய முற்பட்ட போது இலங்கை கடற்படை சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

காங்கேசன்துறை கடற்படை முகாமில் பணியாற்றும், கடற்படை சிறப்பு மாலுமியான குருநாகல் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ரத்நாயக்க என்பவரே உயிரிழந்திருந்தார்.

இந்த நிலையில், அவரது இறுதிக் கிரியைகள் நேற்று முன் தினம் அன்னாரில் இல்லத்தில் இடம்பெற்றது. இதில், கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை அன்னாரின் இறுதிக் கிரியைகளில் யாழ். மாவட்டத்தில் இருந்து கடற்தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கொள்ளைக் கும்பல் தாக்கி வயோதிபப் பெண் மரணம்!

கொழும்பு, ஜூன் 29

எஹலியகொடை, அராபொல பகுதியிலுள்ள வீடொன்றில், கொள்ளையடிக்க நுழைந்த கும்பலொன்று, வீட்டில் வசித்து வந்த வயோதிபத் தம்பதியரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில், 74 வயதுடைய வயோதிபப் பெண் உயிரிழந்ததோடு, அவரது கணவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குறித்த வீட்டில் வயோதிபத் தம்பதியினர் மாத்திரமே வசித்து வந்த நிலையில் இக்கொடூர சம்பவம் அரங்கேரியுள்ளது.

வீட்டுக்குள் நுழைந்த கும்பல், வயதான மனைவியை கூரிய ஆயுதத்தால் தர்க்கிக் கொலை செய்ததோடு, வீட்டின் குளியலறைக்கு அருகில் கணவரையும் தாக்கி, கை, கால்களை கட்டியதாகவும், இத்தாக்குதலில் கணவரும் இறந்துவிட்டதாக கருதிய பின்னர் கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சொத்துக்களை கொள்ளையடிப்பதற்காகவே வீடு புகுந்து இந்த கும்பல் கொலை செய்திருக்கக்கூடும் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில் படுகாயமடைந்து எஹலியகொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெண்ணின் கணவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி என்று தெரிவித்துள்ள எஹலியகொடை பொலிஸார், மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாடசாலை மாணவன் விபத்தில் உயிரிழப்பு !

கொழும்பு, ஜூன் 29

பொலனறுவை பக்கமுன கிரித்தலை பிரதான வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள் மோதியதில் பாடசாலை மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிக்கப்பிட்டிய பகுதியை சேர்ந்த லகிது பின்சர என்ற 18 வயதுடைய மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த மாணவர் தனது நண்பருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது லொறியுடன் மோதியதில் இவ் விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தை ஏற்படுத்திய மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரனைகளை முன்னெடுத்து வருக்கின்றனர். (அ)

# சர்வதேச வணிகக்கடன் தரப்பினரோடு அரசு நிலையான இணக்கப்பாடுகளை எட்டவில்லை!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

"சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் உட்பட சர்வதேச வணிகக்கடன் தரப்புகளுடன் அரசாங்கம் இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் எட்டவில்லை" என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே ஹர்ஷ டி சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் உரையை நாம் முழுமையாகச் செவிமடுத்தோம்.

ஐக்கிய மக்கள் சக்தி எல்லா விடயங்களுக்கும் எதிர்ப்பை தெரிவிக்கவில்லை. உரையை எழுதிக் கொடுத்தவர் யார் என்று தெரியவில்லை. சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு ஆரம்பத்தில் இருந்து கூறி வந்தோம்.

இந்த நாட்டின் சரியான தாய், யார் என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொள்வர்.

ஐக்கிய மக்கள் சக்தி அசடு போல் தான் இதுவரை செயற்பட்டுள்ளதாம். நாம் எவ்வாறு செயற்பட்டோம் என்பதை ஜனாதிபதி கூறும் முன்னர் ஒரு முறை சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். ஆம் சர்வதேச



நாணய நிதியத்தை நாடுமாறு நாமே ஆரம்பத்தில் கூறினோம். 2020 இல் பாராளுமன்றத்துக்கு வந்த முதல் நாளே இதை நாம் கூறினோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாடு இணக்கப்பாடு கண்டதற்கு நாம் எதிராக வாக்களிக்கவில்லை.

பேச்சை எழுதியவர் இதனை அறிந்திருக்கவில்லை போல் தெரிகின்றது. பிரதான இரு தரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான சீனா, ஜப்பான், இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகளுடன் அதன் உத்தியோகபூர்வ கடன் தாரர்களுடன் இணக்கப்பாட்டை எட்டியதற்கு மகிழ்ச்சியடைகிறோம்.

நல்லதொன்று நடக்குமாக இருந்தால் நாம் அங்கும் இங்கும் இலங்கைத் தாயை இழுக்க விரும்பவில்லை.

இலங்கை தாயின் கை, கால்களை உடைக்க நாம் தயாரில்லை. நாம் மக்களுக்கான எதிர்க்கட்சியாகும்.

ஜப்பானுடன் இணக்கப்பாட்டை எட்டியதற்கு இன்று கைதட்டுகின்றனர். இவர்களே ஜப்பானுக்கு அன்று கன்னத்தில் அறைந்து நாட்டை விட்டு விரட்டினர்.

செஹான் சேமசிங்க, அலி சப்ரி போன்றவர்ளின் அரசாங்கமே ஜப்பானை போ என்று கூறி விரட்டியது.

இவர்களே ஆரம்பத்தில் இதனை எதிர்த்தனர். இணக்கப்பாடு எட்டிய விடயங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளனர். இதற்கு ஆதரவு வழங்குமாறு கோரியுள்ளனர். அதன் உள்ளடக்கம் குறித்து அறிய வேண்டியுள்ளது.

2028 வரை கடன் தவணைகளை செலுத்தவேண்டிய தேவை இல்லை என தெரிவித்திருந்தார். கடன் தவணைகளை காலம் தாழ்த்தும்போது வட்டி செலுத்த வேண்டுமா? இல்லையா? அதன் பிற்பாடு வட்டி விகிதம் என்ன?

இது தொடர்பான விடயங்களை அறிய விரும்புகிறோம்.

சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்கள் உட்பட சர்வதேச வணிக்கடன் தரப்பினரோடு இதுவரை எந்த நிலையான இணக்கப்பாடுகளையும் அரசாங்கம் எட்டவில்லை-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு...

தொடர்பில் இரு நாடுகளும் உடன்பாடுகளை எட்டியபோதிலும் உடன்படிக்கை எதனையும் செய்யவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் அண்மையில், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர் தலில் கச்சதீவு விவகாரம் குறித்த பிரசாரம் பிரதான பேசுபொருளாக மாறிய நிலையில் இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

இதனிடையே, இலங் கையின் கடல் எல்லைகள் தொடர்பில் பாராளுமன்றத்திலோ அல்லது வெளி யிலோ கலந்துரையாடப்படவில்லை. 1974ஆம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்கு உரித்தானதாக மாறியது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையும்...

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடந்த ஜனாதிபதி சுற்றாடல் விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், காலநிலை மாற்றத்தை கையாள்வது தொடர்பிலான பிராந்திய தலைமைத்துவத்தை ஏற்க இலங்கை தயாராக இருக்கிறது. இலங்கை தற்போது சர்வதேச சமூகத்தில் பல்வேறு செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

இன்று சுற்றுச்சூழல் என்ற விடயம் அதைவிடவும் விரிவடைந்துள்ளது. சுற்றுச்சூழலில் இருந்து காலநிலை மாற்றம் வரை விரிவடைந்துள்ளது. காலநிலை மாற்றம் இன்று உலகளாவிய பிரச்சினையாக மாறியுள்ளது. மேலும் இது ஒரு பொருளாதார பிரச்னையாகவும் உருவெடுத்துள்ளது. எனவே, சுற்றுச்சூழலும், காலநிலை மாற்றமும் சகல துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

மேலும், காலநிலை மாற்றத்துக்கு ஈடுகொடுக்கும் செயல்பாடுகளுக்காக, சர்வதேச அளவிலான பணிகளையும் ஏற்றுக்கொண்டுள்ளோம். அதன்படியே காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்கான சட்டங்களும் தயார் செய்யப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க நாடுகள் குறைந்த வருமானம் உள்ளவை. அந்த நாடுகளின் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்ய வேண்டும். நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளோம். இப்போது பொருளாதார மாற்ற சட்டத்தை நிறைவேற்றி அந்தப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும். ஆனால், ஆபிரிக்கா போன்ற நாடுகள் அந்த செயன்முறையைச் செய்வது கடினம். எனவே, அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். ஆபிரிக்க நாடுகளின் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய இலங்கை காலநிலை மாற்ற மாநாட்டில் முன்மொழிந்தது.

உக்ரைனில் போரை நிறுத்துமாறு நாங்கள் கோருகிறோம். காஸாவில் போரை நிறுத்துங்கள். இந்தப் போரை நிறுத்தி 5 வருடங்களில் பலஸ்தீன அரசை உருவாக்குங்கள். இதேபோன்று, இஸ்ரேலின் பாதுகாப்பு குறித்தும் நடவடிக்கை எடுங்கள். ஆனால், இலங்கையின் வெளிநாட்டு கொள்கையானது அது பற்றிய உலகின் தெற்கில் குரல் எழுப்புவதாகும். இந்தப் போரை நிறுத்தி ஆபிரிக்க நாடுகளுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நாட்களில் கென்யாவில் நடந்த கலவரங்களை பார்த்தோம். சுமார் 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஒரு நாட்டின் பொருளாதாரத்தை சீர்செய்யவில்லை என்றால் ஏற்படும் நிலைதான் இது. இலங்கையில் இந்த பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்காவிடின் நாமும் இதே நிலையை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கும். (ஐ)

## அமெரிக்க...

அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடுவார்.

ரொபேர்ட் கப்ரோத்தின் வருகை இலங்கை - அமெரிக்கா இடையிலான நட்புறவையும் ஆதரவையும் எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு பொருளாதாரம், நிதித் துறைகளில் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நிலைத் தன்மையை ஊக்குவிக்கும் ஆழமான சீர்திருத்தங்கள் இன்றியமையாதது - என்று கூறியுள்ளார். (ஐ)

## ஹிருணிகாவுக்கு...

பிரியங்க அமரசிங்க என்பவரை கடந்த 2015 டிசெம்பர் 21 ஆம் திகதி ஹிருணிகாவின் பிரத்தியேக பாதுகாவலர்கள் கடத்திச் சென்று தாக்கினர். இதற்கு, ஹிருணிகாவுக்கு சொந்தமான டிபென்டர் ரக வாகனமும் பயன்படுத்தப்பட்டமை தெரிய வந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் ஹிருணிகா, அவரின் பாதுகாவலர்கள் 8 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட 8 பேரும் உடனடியாகவே குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். இதையடுத்து, அவர்க ளுக்கு நட்டஈடும் அபராதமும் விதிக் கப்பட்டதுடன், ஒத்திவைத்த சிறைத் தண்டனையும் விதித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்.

இதனிடையே, இளைஞரை கடத்திச் சென்று தாக்குதவதற்கு உடந்தையாக இருந்தார் என்பன உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுகளில் ஹிருணிகா குற்றவாளியாக இனங்காணப்பட்டார். இதையடுத்தே அவருக்கு 3 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையை நீதிமன்றம் விதித்தது.

இதேசமயம், தண்டனை பெற்ற ஹிருணிகா வெலிக்கடை சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இதேநேரம், ஹிருணிகா பிணை கோரி மேன்முறையீடு செய்வார் என்று அவரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (ஐ)

## ஜே.வி.பி...

நேற்று முன்தினம் மட்டக்களப்புக்கு வந்த அநுரகுமார திஸநாயக்க "பிள்ளையான் மக்களை அச்சுறுத்துகிறார்", என்று மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் முகமாக பிள்ளையான் நேற்று மட்டக்களப்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார். இதிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "அநுரகுமார திசாநாயக்கவுக்கு மண்டை பழுது. அவர்கள்தான் எங்களுக்கு முதலில் ஆயுதங்களை தந்தார்கள். பின்னர், மக்களை சுடுவதற்கு எங்களிடம் ஆயுதம் கேட்டார்கள். நாங்கள் கொடுக்கவில்லை. அப்போது வேறு ஆட்கள் தலைவராக இருந்தனர்.

பிள்ளையான் மக்களை அச்சுறுத்துவதாக இருந்தால், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக்கூடிய வாக்குகளை பெற்றது யார்? எனவே, ஜனநாயகத்தை பற்றி கதைப்பது என்றால் அநுரகுமார திஸநாயக்க யோசித்து - பொறுப்பான தலைவராகக் கதைக்கப் பழகவேண்டும்.

இந்த நாட்டை தீக்குள் தள்ளி அநியாயமாக பல்கலைக்கழக மாணவர்களை கொண்டுசென்று வன்முறையில் ஈடுபடுத்தும் கட்சி அது. இந்த நாட்டை அழிக்க நினைக்கின்ற தலைவர் எங்கள் மண்ணில் வந்து பேசியதையிட்டு கவலையடைகின்றேன்.

அவர்கள்தான், ஒரு பிரபல்யமான ஆயுத குழு. தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புக்கு ஜே. வி. பியினரே ஆரம்ப காலத்தில் ஆயுதங்களை வழங்கினர். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு ஆயுதம் தந்தவர்களும் அவர்கள்தான். பின்னர் அதனை கைமாற்றியதும் அவர்கள்தான். எனவே, அந்த ஆயுதங்களை தேடி எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அநுரகுமார திஸநாயக்கவுக்கு கூறுகிறேன் - என்றார்.

(தொடர்புடைய செய்தி 8ஆம் பக்கத்தில்) (ஐ)

# அஸ்வெசும பயனருக்காக ரூ. 1,160 கோடி விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 28

அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் பயனாளர்களின் வங்கி கணக்குகளில் வைப்பிலிட ஆயிரத்து 160 கோடி ரூபாயை நலன்புரி நம்பிக்கை சபை விடுவித்துள்ளது.

அஸ்வெசும திட்டத்தில் நன்மைகளை அனுபவித்து வரும் 6 இலட்சத்து 22 ஆயிரத்து 495 பயனாளர்களுக்கான ஜூன் மாதக் கொடுப்பனவுக்காகவே இந்தத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தில் பாதிப்புகளை எதிர்கொண்டோருக்கு 5 ஆயிரம் ரூபாயும், இடைநிலை பாதிப்புகளை எதிர்கொண்டோருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாயும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழில் அமைதியை ஏற்படுத்தியவர் சரத்!

### ஜனாதிபதி ரணில்

பாணத்தில் அமைதியை நிலை நாட்ட வேண்டிய தேவை இருந்தது. அதற்காக அங்கு இராணுவத்தின் ஒரு முழுமையான படையணி கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. ஆனால், நான் சரத் பொன்சேகாவையே நியமித்தேன் -என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சரத் பொன்சேகா எழுதிய "இராணுவத்தளபதி நாட்டுக்கு வழங்கிய வாக்குறுதி" நூல் வெளியீட்டு விழா நேற்று தாமரை கோபுர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக பங்கேற்றபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "பீல்ட் மார்ஷல் பொன்சேகா வழங்கிய வாக்குறுதிக்கமைய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்று 3 தசாப்தகால யுத்தத்தை நிறைவு செய்தார். இதன் காரணமாகவே அவர் பீல்ட் மார்ஷலாக தரமுயர்த்தப்பட்டார். இலங்கையில் பீல்ட் மார்ஷலாக செயல்பட்ட ஒரேயொரு இராணுவத் தளபதி அவர் மாத்திரமே.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைதியை நிலைநாட்ட வேண்டிய தேவை இருந்தது. அதற்காக அங்கு இராணுவத்தின் ஒரு முழுமையான படையணி கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று கோரப்பட்டது. ஆனால், நான் சரத் பொன்சேகாவையே நியமித்தேன். காரணம் பொன்சேகா என்ற ஒரு நபர் ஒரு படையணிக்கு சமமானவர் என்பதாலேயே.

போர் களத்தைப் போன்று அரசியலிலும் பல்வேறு போராட்டங்களை - சவால்களையும் சந்தித்துள்ளார். அவற்றில் வெற்றியும் பெற்றுள்ளார். இதேபோன்று எதிர்காலத்திலும் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார். எனவே, அவரின் சேவை இராணுவத் தளபதியாவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ நின்று விடப் போவதில்லை. நாட்டுக்கு சேவை செய்வதற்காக இன்னும் வாய்ப்புகள் உள்ளன - என்றார். (ஐ)

# இலங்கையில் 50 வீத பெண்கள் உடல் பருமனால் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 29

இலங்கையில் உள்ள பெண்களில் 50 வீதமானவர்கள் பருமனாக இருப்பதாக இலங்கை ஊட்டச்சத்து நிபுணர்கள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

நிறுவனத்தின் தலைவர் கலாநிதி திருமதி விக்கிரமசேகர கூறுகையில் - குழந்தைகளிடையேயும் உடல் பருமன் அதிகரித்து வருகிறது.

உடல் பருமன் பற்றி நாம் மறந்துவிட்டோம். நாங்கள் எப்போதும் ஊட்டச்சத்து குறைபாட்டின் மீது கவனம் செலுத்துகிறோம்.

ஆனால் குழந்தை பருவ உடல் பருமன் அதிகரித்து வருகிறது. ஏறக்குறைய 50 வீத பெண்கள் அதிக எடை மற்றும் பருமனானவர்கள்.

இதனால் இலங்கைக்கு ஒரு புதிய ஆராய்ச்சி தரவு கட்டமைப்பு தேவை.

இந்நாட்டில் ஊட்டச்சத்து குறைபாடு குறைந்துள்ள போதிலும், அதிகப்படியான போசாக்கின்மை அதிகரித்துள்ளது-என்றார். (அ)

## வன்செயல்...

எடுத்துள்ளனர்.

மறியலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர் அண்மை யில், யாழ். மாவட்டத்தில் இடம்பெற்ற கடைகள் எரிப்பு, வாள்வெட்டு சம்பவங்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகின்றது.

உடுவிலை சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே கைதானவராவார். அவர் கைது செய்யப்பட்டபோது கைக்குண்டு ஒன்றும் கார், மோட்டார் சைக்கிள் மற்றும் வாள்கள் என்பனவும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இளைஞர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஜூலை 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (ஐ)

# பஸ்கட்டணங்கள் குறைகிறது

கொழும்பு, ஜூன் 29

ஜூலை முதலாம் திகதி முதல் பஸ் கட்டணத்தை ஐந்து வீதம் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அச்சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறினார்.

அதன்படி, ஆரம்ப கட்டணத்தை 2 ரூபாவால் குறைத்து 28 ரூபாவாக அறிவிடத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த பஸ் கட்டண குறைப்பு எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

## சீனாவின்...

ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது சீன ஜனாதிபதி ஷி ஜின்பங்கின் இலங்கை பயணம் குறித்தும் நினைவு கூரப்பட்டது.

சீன அரசின் அழைப்பின்பேரிலேயே மகிந்த ராஜபக்ஷ அங்கு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## ஓய்வு பெற்றார் சட்டமா அதிபர்



கொழும்பு, ஜூன் 29

சட்டமா அதிபர் பதவியில் இருந்து தாம் ஓய்வு பெற்றுள்ளதாக சஞ்சய் ராஜரத்தினம் அறிவித்துள்ளார்.

ஜூன் மாதம் 26ஆம் திகதி அவருக்கு 60 வயதான நிலையிலேயே இந்த அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ளார்.

முன்னதாக, அவரது சேவையை ஆறு மாதங்களுக்கு நீடிப்பதற்கான ஜனாதிபதியின் பரிந்துரை இரண்டு தடவைகள் அரசியலமைப்பு பேரவையினால் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புதிய மின்சார சட்டமூலம் சபாநாயகர் கையொப்பம்

கொழும்பு, ஜூன் 29

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட புதிய மின்சார சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கையொப்பமிட்டதாக மின் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதன்படி நேற்று முன் தினம் முதல் புதிய மின்சார சட்டம் அமுல்படுத்தபட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். (அ)

## எரிபொருள் விலையில் விசேட நிவாரணம்!

### ஜனாதிபதி திட்டம்

கொழும்பு, ஜூன் 29

எரிபொருள் விலைச் சலுகை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்கான எரிபொருள் விலைத் திருத்தம் இன்னும் சில நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இந்த விலைத் திருத்தத்தில் எரிபொருள் விலையில் கணிசமான அளவு குறையும் என அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடு பொருளாதார ரீதியில் குறிப்பிட்ட மட்டத்தை எட்டியுள்ள நிலையில் எரிபொருள் விலைக்கு சில விசேட நிவாரணங்களை மக்களுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், வழக்கமான பெற்றோல் விலை லீற்றருக்கு 20-30 ரூபாயும், வழக்கமான டீசல் விலை லீற்றருக்கு 15-20 ரூபாயும் குறைக்கப்படும் என்று அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகிய 07 பொலிஸார்

கொழும்பு, ஜூன் 29

சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக கெக்கிராவ பொலிஸார் தெரிவித்தனர்.

கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக கெக்கிராவ பொலிஸ் நிலையத்திற்குக் கிடைத்த தகவலின் பேரில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் குழுவொன்று கடந்த 26 ஆம் திகதி தலும்பேவ பிரதேசத்திற்கு சுற்றிவளைப்பு நடவடிக்கைக்காகச் சென்றுள்ளனர்.

இதன்போது,கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த இருவர் தப்பிச் சென்ற நிலையில் சந்தேக நபரொருவர் கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கோடாவுடன் கைது செய்யப்பட்டார்.

இதன்போது, அப்பகுதியில் உள்ள மரமொன்றிலிருந்த குளவிக் கூடொன்று கலைந்ததால் அங்கிருந்த ஏழு பொலிஸ் உத்தியோகத்தர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

## கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கு இலங்கைக் கடன் ஒப்பந்தம் முக்கியமானது!

### சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 29

**சுமார் 10 பில்லியன் டொலர் இருதரப்பு கடனை மறுசீரமைப்பதற்காக சீனா மற்றும் பிற கடன் வழங்கும் நாடுகளுடன் இலங்கை செய்துகொண்ட ஒப்பந்தங்கள் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதை நோக்கி ஒரு படி நெருக்கமாகக் கொண்டு வந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பணிக் குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூயர், "எதிர்காலத்தில் வெளிநாட்டு தனியார் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்களை எட்டுவதில் விரைவான முன்னேற் றம் இருக்கும் என்று நாங்கள் நம்பு கிறோம்" என்று நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தார்.

கடனில் மூழ்கி வங்குரோத்து நிலையில் உள்ள இலங்கை கடனை அடைப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுள்ள நிலையிலும் , இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நாட்டின் வங்குரோத்தை துணிந்து இறங்கிச் செயற்பட்டு மீட்டு வருவதாகக் கூறிவரும் நிலையிலும் , கடனை தீர்த்து கட்டுவதற்கு இன்னும் நிதி உதவிகள் தேவைப்படுவதாக இலங்கை ஜனதிபதி தெரிவித்து வரும் நிலையிலும் சர்வதேச நாணய நிதியம் இவ்வாறு கூறியுள்ளது. (அ)

## அத்தியாவசிய சேவையாக ஜனாதிபதியால் ஆசிரியர் சேவையை அறிவிக்க முடியாது!

கொழும்பு, ஜூன் 29

ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்த முடியாது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீட பேராசிரியர் ஏ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பணிப்புறக்கணிப்பு தொடருமாக இருந்தால் ஆசிரியர் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி நேற்று முன்தினம் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பிலான சட்ட விளக்கத்தை அறிந்து கொள்ளும் நோக்கில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டப் பீட பேராசிரியர் ஏ.சர்வேஸ்வரனை தொடர்புக் கொண்டு வினவிய போதே அவர் இதனை கூறினார். (அ)

## இரு தரப்பு கடன் சீரமைப்பு உடன்படிக்கை; இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்பு

கொழும்பு, ஜூன் 29

சர்வதேச இருதரப்பு கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டமையை, இலங்கை வர்த்தக சம்மேளனம் வரவேற்றுள்ளது.

இந்த உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதன் மூலம், நாட்டின் கடன் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.

மேலும் இது பொருளாதாரத்திற்கான நிதி அணுகலையும் இலகுபடுத்தும் என்று, வர்த்தக சம்மேளனத்தின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மலையக மக்களின் உரிமைகள் குறித்து அமெரிக்கத் தூதுவரிடம் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூன் 29



இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜூலி சாங் தலைமையிலான குழுவினருக்கும், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி மற்றும் மலையக சிவில் சமூக தூதுக்குழுவுக்கும் இடையில் காத்திரமான சந்திப்பு நேற்று கொழும்பு அமெரிக்கத் தூதரின் இல்லத்தில் நிகழ்ந்தது.

இதன்போது, தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். உதயகுமார் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி களுத்துறை மாவட்ட அமைப்பாளர் அன்ரன் ஜெயசீலன் மற்றும் சிவில் சமூகம் சார்பில் பெ.முத்துலிங்கம், பேராசிரியர் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் பொது செயலாளர் விஜயசந்திரன், பேராசிரியர் சந்திரபோஸ், பேராசிரியர் ரமேஷ் ராமசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அமெரிக்க தரப்பில், தூதுவருடன் அரசியல் அலுவலர் அடம் மிசெலோ, யூ.எஸ்.எய்ட் வேலை திட்ட அலுவலர்கள் ஜனக விஜயசிறி, ரெஹானா கட்டிலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் -

இலங்கையின் பன்னிரண்டு மாவட்டங்களில் பரந்து வாழும் மலையக மக்களை, இந்நாட்டில் முழுமையான குடி உரிமை கொண்ட மக்களாக முறை மாற்றம் பெறும் நோக்கில், மலையக சிவில் சமூகத்தின் ஒத்துழைப்புடன் தமிழ் முற்போக்கு கூட்டணி, நாட்டில் அடுத்து வரும் அரசியல் மாற்றங்களை ஒட்டி வகுத்து வரும் வரை - பாதை எழுத்து மூலமான ஆவணம் இன்று அமெரிக்க தூதுவரிடம் கையளிக்கப்பட்டது.

வாழ்வாதார காணி, வதிவிட காணி, கல்வி, தொழில் பயிற்சி, நில சார்பற்ற சமூக சபை ஆகிய முன்னுரிமை விடயங்கள் பற்றிய விபரங்கள் இந்த ஆவணத்தில் அடங்கி உள்ளன.

தினக்கூலி தொழிலாளர்கள், பெருந்தோட்ட துறையில் பங்காளர்களாக முறை மாற்றம் பெறல், பெருந்தோட்ட துறையில் வாழ்கின்ற அனைத்து நிலமற்ற குடும்பங்களுக்கு வதிவிட காணி வழங்கள், கல்வி துறை தொடர்பில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுங்கான விசேட ஆசிரியர் பயிற்சி கல்லூரி அமைத்தல், மலையக பெண்களுக்கான தாதியர் பயிற்சி கல்லூரி அமைத்தல் மற்றும் உலகளாவிய நாடுகளில் பரந்து வாழும் சிறுபான்மை இனத்தவர் மத்தியில் அமைய பெற்றுள்ள நில சார்பற்ற சமூக சபைகள் பற்றிய அனுபவங்களை பகிர்த்து கொள்ளல் ஆகியவை பற்று கலந்துரையாடப்பட்டன.

இத்தகைய நிறுவனங்களை அமைப்பது, அவை தொடர்பான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வது, அரசியல் அமைப்பு திருத்தங்களை மேற்கொள்வது ஆகிய பொறுப்புகளை மக்கள் ஆணையுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி முன்னெடுக்கும்.

அமெரிக்கா உட்பட எமது சர்வதேச சமூக நண்பர்கள் இவற்றுக்கான தொழில் நுட்ப உதவிகள், அபிவிருத்தி உதவிகள் ஆகியவற்றை எமக்கு வழங்க முன் வரவேண்டும் என்று நாம் கோரினோம். இந்த எமது கோரிக்கைகளை சாதகமாக பரிசீலிக்க அமெரிக்க தூதுவர் தலைமையிலான குழுவினர் உறுதி அளித்தனர்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org